## அரசு ஊழியர்

ஜூலை 2019

மலர் : 40 இதழ் : 7

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


### சூடா ஒரு கோப்பை சூப்

## சரித்திரச் சக்கரங்கள்

தாக்குண்டால் புழுகூடத்
தரைவிட்டுத் துள்ளும்
கழுகு தூக்கிட தன் குஞ்சு
காத்திட துடித்தெழும் கோழி
சிங்கம் மூர்க்கமாய் தாக்கும் போது
சிறு முயல்கூட எதிர்த்து நிற்கும்
சாக்கடை கொசுக்களா நாம்
சரித்திரச் சக்கரங்கள்.

**- தணிகைச் செல்வன்**

## தமிழக அரசின் அடக்குமுறையை எதிர்த்து தொடரும் போராட்டங்கள்...

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியனின் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்தும், உடனடியாக இதனை திரும்பப் பெற வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர் போராட்டங்களை அறிவித்தது,

தமிழகத்தில் அதிமுகவின் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த காரணிகளில் பிரதமர் நரேந்திர மோடி மீதான வெறுப்பு அலைக்கு அடுத்தபடியாக இருந்தது ஆட்சியாளர்கள் அதிகார வர்க்கத் தினரின் தவறான வழிகாட்டுதல்களை தெய்வ வாக்காக அப்படியே ஏற்றுக்கொண்டு கண்மூடித் தனமாக நடந்து கொண்ட நிகழ்வுகளாகும். அதிகார வர்க்கத்தினர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது நடத்திவரும் கண்மூடித்தன மான தாக்குதல்களுக்கு தக்க பதிலடியை அதிமுகவின் ஆட்சியாளர்களுக்கு மக்களும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வழங்கினார்கள். தேர்தல் முடிந்ததும் மீண்டும் தங்கள் அதிகாரப் போக்கை அதிகார வர்க்கத்தினர் கையிலெடுத்து விட்டனர் என்பதற்கான ஆதாரங்களை தினசரி நாம் ஊடகங்களில் பார்த்து வருகிறோம். தேர்தல் முடிந்ததும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு பணி உயர்வு வழங்கப்பட மாட்டாது என அதிர்ச்சி யூட்டியது இவ்வரசு. இதன்மூலம் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் மற்றும் போராட்டத்தில் பங்கேற்ற ஆசிரியர்கள் பல பேருக்கும் பதவிஉயர்வு கிடைக்காதோ என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பாதுகாவல னாய் உரிமைகளைப் பெறுவதில் சமரசமில்லாப் போராட்டங்களை நடத்தி சிறை செல்லக்கூட தயங்காத இயக்கமான தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியன் மே 31ஆம் தேதி ஓய்வுபெற இருந்த நிலையில், தேர்தல் தோல்வி மற்றும் ஊழியர்களிடையே போராட்ட உணர்வைத் தோற்றுவித்தவர் என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அவரை இவ்வரசாங்கம் 31.5.2019ஆம் தேதி பணி ஓய்வு பெறவிடாமல் தடுத்திருக்கிறது. இதன்மூலம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதும், இனிமேல் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராட்டம், ஆர்ப்பாட்டம், தர்ணா, கண்டனப் போராட்டம்

போன்றவற்றில் கலந்து கொள்ள விடாமல் பயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதும் அதிகார வர்க்கத்தின் எண்ணமாகும்.

அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் மு.சுப்பிரமணி 2003-ல் நடந்த அரசு ஊழியர் ஆசிரியர் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றுவிட்டு வந்தவர் என்பதும், ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்கள் உரிமைக்காக பலமுறை கடும் போராட்டங்களை நடத்தியவர் என்பதும் அவரை ஓய்வுபெறச் செய்யவிடாமல் தடுப்பதன் மூலம் அவருக்கு பெரியதாக நெருக்குதல் ஏற்படுத்த முடியாது என்பதும் அதிகார வர்க்கத்திற்குத் தெரியும். ஆனால் அவர் பணி ஓய்வு பெறுவதை நிறுத்தி வைப்பதன் மூலமாகவும் பணியிடை நீக்கம் வாயிலாகவும், தற்போதுள்ள நிர்வாகிகள், புதியதாக அரசுப் பணியில் சேர்ந்தவர்கள், சங்கத்தின் பணிகளில் உதவுபவர்கள், சாதாரண அரசு ஊழியர்கள் போன்றவர்கள் அலுவலகத்தை விட்டு வெளியே வர பயம் உண்டாக்குவது அவர்கள் திட்டமாக இருக்கலாம், "பார்த்தீர்களா தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இனிமேல் போராட்டம், தர்ணா, ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் என்று யாராவது வெளியே வந்து பாருங்கள், உங்களுக்கும் அதே கதிதான்" என்று மிரட்டுவதான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்திருக்கிறது இந்த அதிகார வர்க்கம்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தமிழக அரசுடன் ஒரு சுமூகமான உறவுடன் நிர்வாகத்தை நடத்து வோம் என்று விரும்பினாலும், உங்களுடைய உறவும், அணுகுமுறையும் எங்களுக்குத் தேவை யில்லை என்று புறந்தள்ளுகிற வெறுப்பு மனப்பான்மையைத்தான் இந்தப் பணியிடை நீக்கம் காட்டுகிறது. அரசு ஊழியர் சங்கம் எப்போதும் ஊழலுக்கு எதிராக போராடுகிற இயக்கம் என்பதையும், ஊழலுக்கு எதிரான பல போராட்டங்களை அது முன்னின்று நடத்தி யிருக்கிறது என்பதையும் அரசாங்கத்திற்கு தெரியாததல்ல. அப்படிப்பட்ட ஒரு அமைப்பின் மாநிலத் தலைவரான அப்பழுக்கற்ற நபர் மீது பொய்யான புகாரினை திட்டமிட்டு ஜோடித்து, பதிவு செய்து அவரை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் பணியிடை நீக்கம் செய்திருக்கிறார் என்பது முழுக்க முழுக்க காழ்ப்புணர்ச்சி அரசியல்.

இந்த விவரங்கள் தமிழக முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் தெரியுமா என்பது தெரிய வில்லை. ஆனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர் களும் எப்போதும் அரசுக்காக உழைப்பவர்கள் அதன் திட்டங்கள் மக்களுக்கு போய்ச் சேர வேண்டும் என்று சேவை செய்பவர்கள். அவர்கள் தங்களுக்கான உரிமைகளுக்காக களமிறங்கி போராடினாலும் போராட்டம் முடிவுக்கு வந்த உடனே அரசுடன் சுமூகமான உறவையும் அணுகு முறையையும் மேற்கொள்ளவே எப்போதும் விரும்புபவர்கள். அரசும் போராட்டங்கள் முடிந்த வுடன் அரசு ஊழியர்களை தங்கள் குழந்தை களைப் போல பாவித்து பகைமை மனப்பான் மையை வளர்க்காமல் புரிந்துணர்வுடன் இரு தரப்பினரும் சேர்ந்து மக்களுக்கான சேவை செய்வதே இதுநாள்வரை வழக்கமாக இருந்து வருகிறது. ஆனால் இத்தனை காலங்கள் இல்லாத அணுகுமுறையாக கடந்த இரண்டு ஆண்டு காலமாக அரசு ஊழியர்கள் தங்கள் உரிமைகளுக் காக போராடியதை அரசு தன்னுடைய கௌரவப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு விட்டதோ என்று எண்ணும் விதமாக பலவிதமான அடக்கு முறைகளை கையாளுவதிலிருந்து இந்தஅரசு அரசு ஊழியர்களை தன்னுடைய குழந்தைகளாக பாவிக்காமல் எதிரிகளாக பாவக்கிறதோ என்ற பலமான ஐயப்பாடு எழுந்துள்ளது.

அதிகார வர்க்கத்தின் இந்த அரசியல் மூலம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் போராட்டங் களை உரிமை கேட்புகளை ஒடுக்கி விடலாம் என்றோ அவர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டப்படியான சலுகைகளையும் நிலவைகளை யும் தடுத்துவிடலாம் என்று நினைத்தாலோ அது இந்த ஆட்சிக்கு அவர்களே அடித்துக் கொள்ளும் சாவுமணியாகத்தான் இருக்கும் என்பதை வருத்தத்தோடு பதிவு செய்ய கடமைப்பட்டிருக் கிறது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம். 17(பி) குற்றச்சாட்டு நிலுவையில் இருந்தாலும் சம்பந்தப் பட்ட ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்கவோ, பணி ஓய்வுபெற அனுமதிக்கவோ தடையில்லை என்று நீதிமன்ற உத்தரவுகள் உள்ள நிலையில் விருதுநகர் ஆட்சியரின் பணியிடை நீக்க உத்தரவு அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டது என்பதில் சந்தேகமில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகார வர்க்கத்தின் இந்தப் பழிவாங்கும் அரசியலை ஒரு முடிவுக்கு கொண்டு வந்து அரசு ஊழியர்கள்- ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இடையே ஒரு இணக்கமான உறவை ஏற்படுத்த வேண்டும். அதிகார வர்க்கத்தின் இந்த செயல்பாடுகள் எங்களை மீண்டும் போராட்டக் களத்திற்கு நிர்ப்பந்தித்துள்ளது. ஏற்கெனவே அதிகார வர்க்கத் தின் தவறான வழிகாட்டுதலால் பல பிரச்னை களுக்கு தீர்வுகள் ஏற்படாமல் முட்டுக்கட்டையாக மாறி அதன்காரணமாக அதிமுக கடந்த தேர்தலில் கடுமையானதொரு தோல்வியை சந்தித்துள்ள நிலையில் முதல்வர் இதுபோன்ற பிரச்னைகளில்

நேரடியாகத் தலையிட்டு பிரச்னைகளை சுமூக மாகத் தீர்க்க முன் வர வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அதிகார வர்க்கம் அடக்குமுறையை ஏவும் போது உழைக்கும் வர்க்கத்திற்கு இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று ஆர்ப்பரித்து எழுந்து அடக்குமுறையை அழிப்பது அல்லது அடங்கிபோய் அடக்குமுறைக்குள் அமிழ்வது. இவற்றில் இப்போது அரசு ஊழியர்களுக்கு, ஆசிரியர்களுக்கு உள்ள ஒரே வழி ஆர்ப்பரித்து எழுவதே. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இந்தப் பிரச்னையில் உடனடியாக தலையிடாத பட்சத்தில் தொடர் போராட்டங்களை முன்னெடுப் பதைத் தவிர வேறு வழியில்லை. முதல்வரின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் அரசின் அடக்கு முறைகளையும் பழிவாங்கும் நடவடிக்கைகளை யும் கண்டிக்கும் விதமாகவும் பணியிடைநீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் மு.சுப்பிரமணியனின் பணியிடை நீக்கத்தை ரத்து செய்து அவர் பணிஓய்வு பெற அனுமதிக்கப்படும் வரை இந்த தொடர் போராட்டங்கள் தொடரும்.

அதனடிப்படையில் 2.6.2019 அன்று சென்னையில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவின் அடிப்படையில் அரசின் கவனத்தை ஈர்த்து தீர்வு காணும் வகையில் 12.6.2019 முதல் சென்னையில் ஆயிரக்கணக் கான ஊழியர்கள் பங்கேற்ற தொடர் உண்ணா நிலை அறப்போராட்டமும், தமிழகத்தில் அரசு ஊழியர் ஆசிரியரின் எழுச்சி நாளான 2.7.2019 அன்று மாவட்டத் தலைநகரங்களில் பல்லாயிரக் கணக்கான அரசு ஊழியர்கள் கலந்துகொண்ட மாலை நேர தர்ணா போராட்டங்களும் நடை பெற்றது. அரசின் கண்டுகொள்ளாத போக்கு தொடருமேயானால் போராட்டத்தை தீவிரப் படுத்தி நடத்திக் கொண்டே எதிர்வரும் 13ஆம் மாநில மாநாடு அடுத்தகட்ட வீரியமான இந்த அரசை நிலைகுலையச் செய்யக்கூடிய வகை யிலான போராட்டத்தினை உறுதியுடன் நடத்திட முடிவெடுப்போம். ❖

---

# 13ஆம் மாநில மாநாடு வரவேற்புக் குழு அமைப்புக் கூட்டம்

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 13வது மாநில மாநாட்டிற்கான வரவேற்புக் குழு கூட்டம் 22.06.2019 அன்று தஞ்சாவூரில் நடைபெற்றது. மாவட்டத் துணைத் தலைவர் சிவ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் ச.செல்வி வரவேற்புரையாற்றினார். மாநிலத் தலைவர் (பொறுப்பு) ஆ.செல்வம் துவக்கவுரை ஆற்றினார். முன்னாள் மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், மாநில துணைத் தலைவர்கள் எஸ்.பார்த்திபன், மொ.ஞானத்தம்பி, எம்.சுப்பிரமணியன், மாநிலச் செயலாளர்கள் சி.ஆர்.ராஜ்குமார், எம்.சௌந்தரராஜன், ஆ.பெரியசாமி, மாநில பொருளாளர் எம்.தங்கராஜ் மற்றும் நாகை மாவட்டச் செயலாளர் ஏ.டி.அன்பழகன், திருவாரூர் மாவட்டச் செயலாளர் வி.சோமசுந்தரம், திருச்சி மாவட்டச் செயலாளர் வளன்அரசு, அரியலூர் மாவட்டத் தலைவர் பஞ்சாபகேசன் மற்றும் தமிழ்நாடு வருவாய்த்துறை கிராம உதவியாளர் சங்க மாநில பொதுச் செயலாளர் எஸ்.தமிழ்ச்செல்வன், தமிழ்நாடு அனைத்து மருந்தாளுநர் சங்க மாநில பொதுச் செயலாளர் சண்முகம் மற்றும் சி.ஐ.டி.யு. மாவட்டச் செயலாளர் சி.ஜெயபால், ஆயுள் காப்பீட்டுக் கழக ஊழியர் சங்க தஞ்சை கோட்டப் பொதுச் செயலாளர் எஸ்.செல்வராஜ் மற்றும் பல்வேறு தோழமைச் சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். மாநிலச் செயலாளர் இரா.பன்னீர்செல்வம் வரவேற்புக்குழு நிர்வாகிகளை முன்மொழிந்தார். இந்த வரவேற்புக்குழு அமைப்புக் கூட்டத்தில் அனைத்து ஒய்வூதியர் சங்கங்களின் கூட்டமைப்பு மாவட்டச் செயலாளர் இரா.தமிழ்மணி வரவேற்புக் குழுத் தலைவராகவும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஆ.ரெங்கசாமி வரவேற்புக் குழு செயலாளராகவும், சா.கோதண்டபாணி வரவேற்குகுழு பொருளாளர் என 200 பேர் கொண்ட வரவேற்பு குழு அமைக்கப்பட்டது. இறுதியாக மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு சிறப்புரை ஆற்றினார். மாவட்ட பொருளாளர் சா.கோதண்டபாணி நன்றி கூறினார். இந்த மாநில மாநாட்டு வரவேற்புக்குழு அமைப்பு கூட்டத்தில் 150 கலந்து கொண்டனர்.* ❖

# இது கண்ணீர்த் துளிகளைத் தடுக்கும் வியர்வைத் துளிகளின் மாநாடு!





அன்பிற்கினிய தோழர்களே!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அமைக்கப்பட்டு 35 ஆண்டுகள் முடிந்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பல உரிமைகளை சிலபேர் தங்கள் சுயநலங்களுக்காக சமரசம் செய்து கொண்டதன் விளைவாக உருவானது தான் இந்த இயக்கம். ஊழியர்கள் உரிமைகள் எதுவாயினும் அதை சமரசம் செய்துகொண்டு சகித்துப் போகாமல் போராடிப் பெற வேண்டும் என்கிற நோக்குடனும், உரிமைகளை பெறும்வரையில் சமரசமில்லா போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற லட்சிய வேட்கையுடனும் தொடங்கப்பட்டதுதான் இந்த இயக்கம்.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த ஸ்தாபனத்தின் செயல்பாடுகளை ரீவைண்ட் செய்து சங்கத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை, விரைவுபடுத்த வேண்டிய நடவடிக்கைகளை சிறப்பான செயல்பாடுகளின் மூலம் முத்திரை பதித்த தோழர்களுக்கு பொறுப்புகள் வழங்கி உற்சாகப்படுத்தும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காகவும், சங்க உணர்வை, சங்க இருப்பை, சங்கம் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை ஊழியர்களும், நிர்வாகிகளும் மீண்டும் ஒரு முறை ரீசார்ஜ் செய்து கொள்வதற்காக மாநில மாநாடுகளை நடத்துகிறோம். அந்த வகையில் நமது ஸ்தாபனத்தின் 13வது மாநில மாநாடு தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை பூமியில் செப்டம்பர் 27 முதல் 29 வரை நடைபெறவுள்ளது,

என்ன லட்சிய நோக்குடன் இந்த இயக்கம் துவங்கப்பட்டதோ இந்த 35 ஆண்டுகளும் அந்த லட்சியத்திற்காக, சமரசம் செய்து கொள்ளாமல், தொடர்ந்து ஊழியர்கள் உரிமைக்காக போராடி வருகிறது நமது சங்கம். அரசு ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது எந்த ஒரு அரசாங்கமும் ஏனோதானோவென்று முடிவெடுத்துவிட முடியாதபடி ஊழியர்களை காப்பதும் அவர்தம் உரிமைகளை கேட்பதும் போராட்டங்களை முன்னெடுத்து அதிகாரவர்கத்துக் எதிராக வாதாடுவதுமான நடவடிக்கைகளில் மற்ற இயக்கங்களை விட முன்னோடி இயக்கமாக நம் இயக்கம் விளங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை புறந்தள்ளிவிட்டு எந்த ஒரு அரசாங்கமும் ஊழியர்கள் மீதான உரிமைகள் மீது கைவைத்து விடவோ அல்லது கைவிரித்துவிடவோ முடியாத அளவுக்கு அரசு ஊழியர்களின் பாதுகாப்பு கவசமாக, அரணாக இன்று ஒரு பெரும் இயக்கமாக இச்சங்கம் விளங்குகிறது என்றால் அதற்குக் காரணம் நம்முடைய ஆசான் தோழர் எம்.ஆர். அப்பனும் அவர் வழிபற்றிய ஆளுமைத் தோழர்களின் அர்ப்பணிப்பு செயல்பாடுகளும் தொடர்ந்து நடத்திய போராட்டங்களும் விட்டுக்கொடுக்காத உரிமைகளும்தான்.




ஒரு இயக்கம் அல்லது அமைப்பு என்பது எப்படி இருக்க வேண்டும்? அது அதனுடைய ஒவ்வொரு உறுப்பினர்களிடத்திலும் உயிர் மூச்சாக இருக்க வேண்டும். அவ்வப்போது ஊழியர்கள் இதயத்துக்குள் ஒரு கவிதையைப்போல் மணம் பரப்ப வேண்டும். மீண்டும் அடுத்த கட்ட போராட்டத்துக்கான ஆயத்தங்களுடன் காத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் நம் மனதில் அசாதாரணமான புதிய படிமங்களையும் கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச்சுற்றி

நிகழும் குழப்பம் நிறைந்த வருத்தமளிக்கக்கூடிய, பரவசமான மாற்றங்களின் உண்மைக் காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளும் வகையில் அது நம் கண்களைத் திறக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட பெரும் மக்கள்திரள் அனுபவித்துக் கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட வேண்டும். தான் கொண்டிருக்கும் உண்மையான விடுதலைக்கான, உரிமை மீட்புக்கான சாத்தியத்தை அனைவரும் உணர்வதற்கான உந்துதலை அது தர வேண்டும்.

நம்முடைய ஸ்தாபனம் இதையெல்லாம் ஊழியர்கள் மத்தியில் விதைத்துள்ளதா? சிந்தனையைத் தூண்டியுள்ளதா? சாதித்துள்ளதா? என்பதை இந்த அமைப்பின் செயல்பாடுகளிலிருந்தும், இந்த செயல்பாடுகளில் ஊழியர்களின் பங்களிப்பிலிருந்தும் அவரவர் செயல்பாடுகளுக்கேற்ப உணர்ந்து கொள்ளலாம்.

இந்த 13ஆம் மாநில மாநாட்டில் நாம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளுக்காக மட்டும் அல்லாமல் மக்களுக்கான உரிமைகளை பெற்றுத் தருவதற்காகவும் நம்முடைய ஸ்தாபனத்தை வலிமைப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்வோம். எனவே, மேற்கூறிய ஸ்தாபன நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் முனைப்புடன் ஈடுபட்டு ஸ்தாபனத்தை முன்னெடுத்துச் செல்ல இந்த 13ஆம் மாநாட்டில் உறுதி ஏற்போம். இயக்க நடவடிக்கைகளை இன்னும் பட்டை தீட்ட நடைபெறவுள்ள மாநாட்டில் கீழ்க்கண்டவைகள் குறித்தும் அலசி ஆராய்வோம்.

- ➔ சங்கத்தில் முன்னோடித் தோழர்கள் தங்களுக்கு பின்பு சங்கத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய முனைப்பான தோழர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு போதிய பயிற்சிகள் அளித்திருக்கின்றனர். ஓய்வுபெறும் முன்னோடி தோழர்களின் காலத்திற்குப் பின்னர் சங்க அமைப்பு முன்னெடுத்துச் செல்லக்கூடிய நபர் இல்லாமல் ஸ்தாபனத்தில் வெற்றிடம் ஏற்பட்டுவிடாமல் இருக்க நாம் செய்ய வேண்டியவைகள் குறித்து பரிசீலனை செய்வோம்.

- ➔ சங்கம் நடத்துவது சவாலாக மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் இருக்கும் உறுப்பினர்களை புதுப்பித்தல், புதிய உறுப்பினர்களை சேர்த்தல் போன்றவற்றில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்கிற யதார்த்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டியுள்ளது. தொடர்ந்து இயக்கங்களும், போராட்டங்களும் நம்முடைய ஸ்தாபன நடவடிக்கையை பின்னுக்கு தள்ளியிருக்கின்றன என்கிற கருத்தை நாம் ஏற்றுக்கொள்வது குறித்தும், நமது முன்னோடிகளும் இதுபோன்ற போராட்ட காலங்களில் கூட ஸ்தாபன நடவடிக்கைகளை தொய்வின்றி செய்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எப்போதும் இல்லாத அளவுக்கு உறுப்பினர் சந்த புதுப்பித்தலாவது இருக்கட்டும் அல்லது புதிய உறுப்பினர் சந்தா சேர்க்கையாக இருக்கட்டும் அரசு ஊழியர் இதழுக்கு சந்தாதாரர் சேர்க்கும் நடவடிக்கையாக இருக்கட்டும் நாம் கடந்த ஆண்டில் ஏற்படுத்தியிருந்த இலக்கை எட்ட முடியாமல் போயிருக்கிறது. முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 2017-2019 காலம் போராட்டங்களும் இயக்கங்களும் நிறைந்த காலமாக இருந்தது மட்டுமே இதற்கு காரணமாக சொல்வது சரியாகுமா? ஸ்தாபனம் உறுதியாகவும் அதன் உறுப்பினர்கள் குறையாமலும் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதன் மூலமாகவும்தான் திடமான அமைப்பாக பரிணமிக்க முடியும். ஸ்தாபன நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தொய்வுகளுக்கான காரணங்களையும் அதை நிவர்த்தி செய்வதற்கான வழிமுறைகளையும் காண வேண்டிய தருணம் குறித்து விவாதிப்போம்.

- ➔ அரசுத் துறையில் உள்ள ஊழியர்களை புதிய ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் பழைய ஓய்வூதியம் பெறுபவர்கள் என்று இரு பிரிவாக பிரிந்துவிட்ட நிலையில் தற்போது பழைய ஓய்வூதியம் பெறுபவர்கள் ஓய்வு பெற்றுச் செல்லச் செல்ல புதிய ஓய்வூதியம் பெறுபவர்கள் அதிகமாகி வருகிறார்கள் என்கிற யதார்த்தம் அனைவரும் உணரக்கூடியதே. ஆனால் புதிய

ஓய்வூதியத் திட்டத்தை எதிர்ப்பதில், பழைய ஓய்வூதியம் திட்டத்தில் இருப்பவர்கள் காட்டும் அளவுக்கு புதிய ஓய்வூதிய திட்டத்தில் இருப்பவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்ற விமர்சனம் மற்றும் புதிய ஓய்வூதியத் திட்டத்தில் இருப்பவர்களை போராட்டக் களத்திற்கு அழைத்துவர சங்க நிர்வாகிகளும் பொறுப்பாளர்களும் செய்வது குறித்தும் விடை காண்போம்.

- சமீப காலமாக புதிதாக அரசுப் பணிகளில் சேர்பவர்கள் சங்க உறுப்பினர்களாவதும், சங்க நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் மிக சொற்பமான அளவிலேயே உள்ளது. அவர்கள் சங்க நடவடிக்கைகளில் ஈடுபாடு கொள்ளாமல் தடுக்கும் புறக்காரணிகள் என்ன என்பது குறித்தும் உண்மையிலேயே அவர்களுக்கு சங்கம் பற்றிய அறிதலும் புரிதலும் இல்லையா அல்லது சங்க அமைப்பில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பவில்லையா என்பது குறித்தும் அலசி ஆராய்வோம்.

- அரசுத் துறைகளை தனியார் மயமாக்கும் சித்திக் கமிட்டி அரசாணை வந்தபிறகு அதன் முதல் செயல்பாடு கருவூலக் கணக்குத் துறையில் ஆரம்பித்திருக்கிறது. கருவூல கணக்குத்துறையை கணினி மயமாக்குவதாக கூறிக்கொண்டு அதை தனியார் நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. இதன்மூலம் கருவூலக் கணக்குத் துறை என்ற ஒரு துறையே மூடப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அறிவியல் தொழில்நுட்பங்களை நாம் மறுக்கவில்லை. அதே சமயம் அவற்றை அரசு ஊழியர்களுக்கு போதிய பயிற்சி அளித்து அவர்களை பணி செய்ய அரசு விரும்பவில்லை என்பதுடன், அரசுத்துறை வேலைகளை ஒவ்வொன்றாக ஒழித்துக்கட்ட இந்த அரசு முடிவு செய்துவிட்டதன் தொடக்கம்தான் இது. இன்று கரூவூலக் கணக்குத் துறைக்கு நிகழ்ந்தது நாளைக்கு வேறு துறைக்கு நிகழலாம் ஒரு நாள் அது நாம் இருக்கும் துறைக்கும் வரலாம். இந்தப் போக்கை அரசின் அடாவடித்தனத்தை அரசாங்கத்தை கார்ப்பரேட் மயமாக்கப் பார்க்கும் வன்மத்தை வேரறுக்க நாம் என்ன செய்யலாம் என்பது குறித்தும், எதுமாதியான தொடர் இயக்கங்களை மேற்கொள்ளலாம் என்பது குறித்தும் விவாதிப்போம்.

- ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக, பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு எதிராக, நீட்தேர்வை ரத்து செய்யக் கேட்டு, காவிரியில் நீர் திறக்கக் கோரி, செவிலியர், விவசாயிகள், மருத்துவ மாணவர்கள் போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டங்களுக்கு ஆதரவு, நெடுவாசல், ஹைட்ரோ கார்பன் திட்டங்களுக்கு எதிர்ப்பு என பலவிதமான சமூகப் போராட்டங்களில் நாம் பங்கேற்கிறோம். மக்களுடன் இணைந்து பயணிப்பது குறித்து சமூகம் சார்ந்து மக்களுடன் இணைந்து களம் காண விவாதிப்போம்.

- வன்முறை, சாதியம், மதவாதம், வகுப்புவாதம், ஆணாதிக்கம், போன்றவற்றை அரசாங்கத்தின் ஆசிர்வாதத்தோடு நிகழ்த்தும் வேலைகளை ஒரு கூட்டம் செய்து வருகிறது. சிறுபான்மையினருக்கு எதிரான சிந்தனைப் போக்கும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. முக்கிய பொறுப்புகளின் உள்ளவர்களே ஆபத்தான வகையில் பேசுகின்றனர். இதுகுறித்தும் விவாதிப்போம்.

- அரசின் வருவாயில் 70 சதவீதத்தை அரசு ஊழியர்களுக்கு செலவு செய்து விடுகிறோம் என்று அமைச்சர்கள் தொடர்ந்து பொய்ப் பிரச்சாரங்கள் செய்து போராட்டங்களை நசுக்கப் பார்க்கிறார்கள். இவர்களுக்கு தக்க பதிலடி வழங்க விவாதிப்போம்.

- வாட்ஸ்ஆப் என்கிற வரம் சங்கத்தின் தகவல் பரிமாற்றங்களுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. இதில் தேவையற்ற பதிவுகளையும் சுயவிமர்சனங்களையும் நிர்வாகிகள் பதிவிட்டு ஒருவருக்கு ஒருவர் வார்த்தைப் போர்களில் ஈடுபடுவதும், தனி நபர்கள் குறித்து விமர்சனங்கள் சொந்த விருப்பு வெறுப்புகள் மற்ற சங்க நிர்வாகிகளிடையே அருவெறுப்பைத் தோற்றுவிக்கும் சடங்காகவே உள்ளது. ஒரு குழுவுக்குள் அதுவும் பொறுப்புள்ள ஒரு

குழுவுக்குள் இருக்கும் நாமே இப்படி செய்வது சரியாகுமா? இதுகுறித்து நம் ஒவ்வொருவரின் உறுதிமொழியையும் நாம் பரிசீலிப்போம்.

- சங்கப் பொறுப்புகளில் உள்ள நாம் அனைவரும் தலைமைப் பொறுப்புக்கான இலக்கணத்தோடு இருக்கிறோமா? ஸ்தாபன கடமைகளை நாம் ஒவ்வொருவரும் சரியாகச் செய்கிறோமா? சங்கத்தின் மீது பற்றுறுதி, நேர்மை, அறியும் ஆர்வம், துணிவு, பொறுப்புணர்வு, கட்டுப்பாடு, உறுப்பினர்களோடு பிணைப்பு ஆகியவைகளை நாம் கொண்டிருக்கிறோமா? ஊழியர்களுடைய உணர்வின் ஆழத்தையும், அனுபவங்களையும் சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுகிறோமா? செயல்படுகிறவர்கள் செயல்படாதவர்களை ஊக்குவிப்போமா? செயல்படாதவர்கள் செயல்படுவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு அடுத்த நிலைக்கு உயர்த்திக் கொள்வோமா? என்பது குறித்து விவாதிப்போம்.

- மாநில செயற்குழுவின் முடிவுகளை அமல்படுத்துவதற்கும் மாநில சங்கத்தின் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதற்கும் நாம் நம்முடைய பங்களிப்பை எவ்வாறு செய்கிறோம்? சங்கத்தில் யாரோ ஒரு சிலர் மட்டும் பொறுப்புகளை சுமப்பதும், மற்றவர்கள் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு பாராமுகமாக இருப்பதாகவும் வரக்கூடிய விமர்சனங்கள் குறித்து அலசி ஆராய்வோம்.

- மாவட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், எல்லா மாவட்டங்களிலும் உறுப்பினர் சேர்க்கை, அரசு ஊழியர் சந்தா, எம்ப்ளாயீஸ் போரம் சந்தா போன்றவை இலக்கை எட்டவில்லை. இந்த ஆண்டு என்பது நிதர்சனம் இதை அவ்வப்போது ஞாபகப்படுத்தி மாவட்டங்களை தொய்வில்லாமல் எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு யாருக்கானது என்பது குறித்து விவாதிப்போம்.

- புறசூழ்நிலைகளைத் திறமையாக சந்தித்து முறியடித்திட ஊழியர்களின் தயார் நிலையை நாம் ஏற்படுத்தி இருக்கிறோமா? பாதுகாப்பான சவால்களை சந்திக்கும் இந்த நிலையை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும் நம்முடைய அன்றாட செயல்பாடுகளில் மாற்றம் தேவையா இல்லையா? ஆம் என்றால் என்ன மாதிரியான மாற்றம்? தேவையில்லை என்றால் அதற்கான காரணம் என்ன என்பது குறித்தும் அலசுவோம்.

- இன்றைய உலகமய, தாராளமய, தனியார் மய கொள்கைகளின் அமலாக்கத்தின் விளைவாக நாம் சந்தித்து வரும் சவால்கள் மேலும் சந்திக்க வேண்டியுள்ள சவால்களை உறுதியுடன் எதிர்கொள்ள ஊழியர்களை சந்தித்து அவர்களை பக்குவப்படுத்துவது, பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோமா என்பது குறித்தும் விவாதித்து முடிவெடுப்போம்.

- ஸ்தாபன நடவடிக்கைகளில் முக்கியமானதான அனைத்து வட்டக் கிளைகளும் உயிரோட்டத்துடன் சுயமாக செயல்படுவதை உறுதியும் உத்திரவாதமும் செய்துள்ளோமா? வட்ட, மாவட்ட, மாநில நிர்வாகிகள் அனைவரும் சங்கப் பணிகளில் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் நம்மை ஈடுபடுத்தியுள்ளோமா என்பதையும் விரிவாக விவாதிப்போம்.

- ஏற்கெனவே உறுதி ஏற்றுக் கொண்டபடி மாவட்டம் தோறும் அரசு ஊழியர் கலைக் குழுக்கள், அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மகளிர் துணைக் குழுக்களை செயல்படுத்துவதை உறுதி செய்வதில் நாம் ஆற்றியுள்ள பங்கு குறித்து விவாதிப்போம்.

- சங்க ஜனநாயக செயல்பாடுகளை உத்திரவாதப்படுத்தியிருக்கிறோமா எப்படி என்பது குறித்து அலசுவோம்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள போராடும் உரிமை இன்று அரசாங்கத்தால் அபகரிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. நீதிமன்றங்களும் கார்ப்பரேட் கம்பெனிகளின் முகமைகளாக மாறிவிட்டனவோ என்கிற அச்ச உணர்வு எழுகிறது. தூத்துக்குடியில் நடந்த மக்கள் போராட்டம் உலகெங்கிலும் அதிர்ச்சை அலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் மத்திய அரசும், நீதிமன்றமும் மக்களுக்கான நியாயங்களை உறுதி செய்ய ஓடோடி வரத் தவறியுள்ளன. 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு ஒரு வருத்தச் செய்தியை போடாத பிரதமரும், தன்னுடைய மக்களுக்கு நேர்ந்த துன்பத்தை நேரில் சென்று ஆறுதல் கூறக்கூட முன்வராத முதல்வரும் மக்கள் நலனின் அறங்காவலர்கள் என்று கூறிக்கொள்கிறார்கள். இந்த நிலைதான் சென்னை - சேலம் பசுமை வழிச்சாலையை எதிர்க்கும் கிராம மக்கள் மற்றும் விவசாயிகளுக்கும் நேர்ந்து கொண்டிருக்கிறது. நல்ல திட்டங்களை மக்கள் எதிர்க்கக் கூடாது என்று கூறும் நீதிமன்றங்கள் மக்களிடம் இந்த எட்டுவழிச் சாலை நல்ல திட்டம்தான் என்பதை விளக்க அரசுக்கு அறிவுரைக்க முன்வரவில்லை. மக்கள் கருத்தைக் கேட்காமல் போடப்படவுள்ள சாலையை எதற்காக எதிர்க்கிறார்கள் என்பதை அறியக்கூட நீதிமன்றம் விருப்பப்படாத சூழ்நிலையில் நாம் கையிலெடுக்கும் போராட்டங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து விரிவாக விவாதிப்போம்.

- பயிற்சிப் பட்டறைகளும் போராட்ட அணுகுமுறைகளும் ஒரு தொழிற்சங்கத்திற்கு இன்றியமையாத குணங்கள் என்பது குறித்து நம்முடைய பார்வை என்ன என்பது குறித்து பேசுவோம்.

- கார்ப்பரேட் கம்பெனிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் யோகா, தவம், மனவளக்கலை போன்ற பயிற்சிகள் மூலம் உரிமைக்காக போராடும் ஊழியரின் கோபங்களும் போர்க்குணங்களும் சுத்திகரிக்கப்பட்டுவிடும் என்ற கருத்தை பற்றி விவாதிப்போம்.

- நமது உறுப்பினர்களின், ஊழியர்களின், பொதுமக்களின் மனங்களை வென்றிட நாம் மேற்கொள் வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

இப்படிப்பட்ட பல்வேறுவிதமான கேள்விகளுக்கு விடை காணும் வகையில் தஞ்சையில் செப்டம்பர் 27, 28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறும் 13வது மாநாட்டில் விவாதித்து விடை காண்போம்!

இது,
கண்ணீர்த் துளிகளைத்
தடுக்கும்
வியர்வைத் துளிகளின்
மாநாடே!
உயர்வு காண
உரிமை பேண
செந்நீர்த் துளிகளுக்கும்
இங்கே உடன்பாடே!
பகையினைக் கொய்யும்
பணிதனைச் செய்ய
ஒன்று கூடி வழிதேடே!

❖

# உத்தம்சிங் என்றொரு மாவீரன்!



உத்தம் சிங், பகத்சிங்கை போலவே, 1919ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜாலியன் வாலாபாக் படுகொலையால் கோபம் கொண்ட சிங்கமுக இளைஞன்.

படுகொலைக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கப் புறப்பட்டு, பல சிரமங்களை எதிர்கொண்டு, பல நாடுகள் கடந்து, சமயம் பார்த்துக் காத்திருந்து 21 ஆண்டுகள் கழித்து அவர்களுடைய சொந்த மண்ணான இங்கிலாந்திலேயே பழிவாங்கியவன் உத்தம்சிங்.

இறுதியாக மரண தண்டனைத் தீர்ப்பை வாசித்து, பேனா முனையை உடைத்தான் வெள்ளைக்கார நீதிபதி.

“என் தாய் நாட்டுக்காகச் சாவதை விட வேறென்ன பெருமை எனக்குக் கிட்ட முடியும்” என்று அந்த வழக்கு மன்றமே அதிரும் வண்ணம் முழங்கினான் ராம் முகம்மது சிங் ஆசாத்.

ராம் முகம்மது சிங் ஆசாத் என்கிற அந்தப் பெயரே விசித்திரமாக இல்லையா!

உத்தம்சிங் என்பது அவனது பெற்றோர் வைத்த பெயர்! அவன் தனக்குத் தானே, தனது அடையாளமாக, தனது இலட்சியப் பயணத்திற்காகச் சூட்டிய பெயர்தான் ராம் முகம்மது சிங் ஆசாத்! இந்து, முஸ்லிம், சீக்கியர் ஒற்றுமையின் அடையாளமாகத் தன் பெயரை அவ்வாறு மாற்றிக் கொண்டான் உத்தம்சிங்.

புரட்சிகரக் கொலையாளியாகவும் தியாகியாகவும் மறுபுறம் சித்தபிரமை பிடித்தவன் - பயங்கரவாதியாகவும் வரலாறு அவனைப் பதிவு செய்திருக்கிறது.

பஞ்சாப் மாநிலம் முழுவதும் அவன் நாட்டுப்புற வீரதீர நாயகனாகவும், தேசபக்த விடுதலைப் போராளியாகவும் போற்றப்படுகிறான்.

ஆனால் உத்தம்சிங் தனக்குத் தானே சூட்டிக் கொண்ட ராம் முகம்மது சிங் ஆசாத் என்கிற பெயரும் தேசிய விடுதலைக்கு அவன் தெரிந்தெடுத்துக் கொண்ட புரட்சிப்பாதையும் புரட்சிகர நடவடிக்கையும் அவன் உண்மையான, நாட்டுப் பற்றுமிக்க பொதுவுடைமைப் புரட்சிப் போராளி என்பதையே நிறுவுகின்றன.

அவன் நினைவை, இலட்சியத்தைப் போற்றும் முகமாக “ராம் முகம்மது சிங் ஆசாத் என்கிற உத்தம்சிங்” என்கிற திரைப்படம் வெளிவந்துள்ளது.

இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் ரௌலட் சட்டத்தை எதிர்த்து, 1919 பைசாகி பண்டிகை நாளன்று, பஞ்சாபின் அமர்தசரசு நகரின், நாற்புறமும் மதில்கள் சூழ்ந்த ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடினர். அதன் ஒரே நுழைவாயிலை அடைத்துக் கொண்டு நின்ற 90 போலீசுகாரன்களையும் குண்டுகள் தீரும்வரை சுடும்படி உத்தரவிட்டான் வெள்ளைக்காரத் தளபதி ஜெனரல் டயர்.

“துப்பாக்கி ரவைதீரும்வரை சுடும்படி உத்தரவிட்டேன். இன்னும் குண்டுகள் இருந்திருந்தால் மேலும் சுட்டிருப்போம். பிரிட்டிஷ் அரசை எதிர்ப்பவர்களுக்கு இதுதான் கதி என்று பாடம் புகட்டவே அப்படிச் செய்தேன்” என்று திமிரோடு விசாரணை மன்றத்தில் சொன்னான் ஜெனரல் டயர்.

“அரசின் உத்தரவுக்குக் கட்டுப்பட்ட அதிகாரியாக ஜெனரல் டயர் தன் கடமையை நிறைவேற்றினார். எனவே அவர்மீது பழி போட்டுத் தண்டிப்பதை நான் விரும்பவில்லை” என்று ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு வக்காலத்து வாங்கியவர்தான் தேசப் பிதா மகாத்மா காந்தி என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

அன்று ஜாலியன்வாலாபாக் படுகொலையைத் தன் கண்முன்னால் கண்டு துடித்தவன் தான் உத்தம்சிங் என்ற 19 வயது இளைஞன். அன்று 300 பேர் கொல்லப்பட்டதாகப் பத்திரிகைகள் எழுதின. 2000 பேராவது இருக்கும் என்பது தான் மக்களின் நினைவில் நிற்கிறது. இந்தப் படுகொலைக்கு நேரடிக் காரணமானவர்கள்

இருவர். ஒருவன், கொலைப்படைக்குத் தலைமையேற்ற தளபதி டயர். மற்றவன் அதற்கு உத்தரவிட்ட பஞ்சாப் மாநில ஆளுநராக இருந்த மைக்கேல் ஓ. டயர். இவ்விருவரையும் கொன்று பழிதீர்ப்பது என்று சபதம் மேற்கொண்டான் உத்தம்சிங். நீதி, சமத்துவம் பல்வேறு மதத்தவர்களிடையே சகோதரத்துவம் ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்ட உத்தம்சிங் அமெரிக்காவிலும் கனடாவிலும் வாழ்ந்த இந்தியர்களால் துவங்கப்பட்ட இந்திய கேதார் கட்சி (இந்திய புரட்சிக் கட்சி)யில் இணைந்தான்.

இந்து- இசுலாமிய - சீக்கிய ஒற்றுமை விடுதலையைக் குறிக்கும் வகையில் ராம் முகம்மது சிங் ஆசாத் என்று பெயர் சூட்டிக் கொண்டான். ''மதத்தின் பெயரால் என்மக்களிடம் என்னைப் பிரிப்பது என்னையே துண்டுத் துண்டாக வெட்டுவதாகும்'' என்று சொன்னான். தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா வழியாகப் பயணமான அவன் 1933 -ல் பிரிட்டனுக்கு போய்ச் சேர்ந்தான்.

உத்தம்சிங்கின் இலக்குகளில் ஒருவனான ஜெனரல் டயர் காலனிய அரசின் பாராட்டு- பரிசு பெற்று பதவி உயர்வு பெற்று லண்டன் திரும்பி, பின்னர் வாத நோயால் இறந்தான். இன்னொரு இலக்கான பஞ்சாப் ஆளுநராக இருந்த மைக்கேல் ஓ.டயர் பதவி ஓய்வு பெற்றிருந்தான். உத்தம்சிங் அவனது மாளிகையில் பணியாளாகச் சேர்ந்தான். இரகசியமாகப் பலிவாங்கினால் எஜமான் - பணியாள் தகராறாகக் கருதப்படும். அரசியல் காரணம் மறைக்கப்படும் என்பதால் தகுந்த தருணத்திற்குக் காத்திருந்தான்.

அந்நாட்களில் இலண்டன் நகரம் நாஜி விமானப் படையினால் எப்போதும் தாக்கப்படும் என்ற அச்சத்தால் இராணுவக் கெடுபிடியில் நிறைந்திருந்தது. அத்தனையையும் மீறி பக்கிங்காம் அரண்மனைக்கு மிக அருகே இருந்த அரங்கத்தில் துப்பாக்கியுடன் நுழைந்த உத்தம்சிங் நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் ஓ.டயரைச் சுட்டு வீழ்த்தினான்.

''நீண்ட 21 ஆண்டுகளாக இப்படிப் பழிதீர்க்க முயன்று வருகிறேன். என்பணி நிறைவேறியதற்காக நான் ஆனந்தமடைகிறேன். இது என் கடமை'' என்று முழங்கினான். கதிகலங்கிப்போனது ஆங்கிலேயக் காலனி அரசு.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், உத்தம்சிங்கைப் பாராட்டினார். பின்னாளில் இந்தியாவில் நேரு வருத்தம் தெரிவித்தார்.

மாவீரன் பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்றவர்களின் தியாகப் பாரம்பரியத்தில் ஊறிப் போனவன் உத்தம்சிங். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் போது பகத்சிங், ராஜகுரு, சுகதேவைத் தூக்கிலிட சம்மதம் தெரிவித்தவர் காந்தி. ''அந்தப் பையன்களைத் தூக்கிலிடுவதாக இருந்தால் கராச்சி காங்கிரசு மாநாட்டுக்கு முன்னரே தூக்கிலிடுவதுதான் நல்லது'' என்று இர்வின் பிரபுவுக்கு கடிதம் எழுதினார் காந்தி. ஆங்கிலேய அரசு அதை ஏற்று நிறைவேற்றிய பிறகு, கராச்சி மாநாட்டுக்கு வந்த காந்தி, பட்டேலை எதிர்த்து, ''பகத்சிங்கைக் கொன்றவரே திரும்பிப்போ'' என்று ஆத்திரத்துடன் பொங்கி எழுந்தனர் மக்கள்.

லண்டன் நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது. குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்ட உடனே உத்தம்சிங் வெடித்தார். "பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நீதிமன்றத்திற்குத் தம்மை விசாரிக்கும் உரிமையோ தகுதியோ கிடையாது. மைக்கேல் ஓ.ட்வியரைக் கொன்றதற்காக நான் வருத்தப்படவில்லை. இந்த தண்டனை அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டியதே.." என்று நீதிபதியைப் பார்த்து கோபமுடன் கூறினார். அதன் பிறகு நீதிமன்றத்தில் உத்தம்சிங் சொன்ன கருத்துக்களில் அனல் பறந்தது.

"நான் மரணத்திற்குப் பயப்படவில்லை. என் தாய் நாட்டை விடுவிக்க உயிர் துறப்பதற்காக பெருமைப்படுகிறேன். நான் போனபிறகு என்னுடைய இடத்திற்கு என் தேசத்தின் மக்கள் வருவார்கள். அசிங்கம் பிடித்த நாய்களான உங்களை அவர்கள் விரட்டுவார்கள். நீங்கள் இந்தியாவிற்கு வருவீர்கள். பிறகும் பிரிட்டனுக்குத் திரும்பி பிரபு ஆவீர்கள். நாடாளுமன்றத்திற்குப் போவீர்கள். நாங்கள் பிரிட்டனுக்குள் வந்தால் தூக்கில் போடுவீர்கள். ஆனால் நீங்கள் பாரத தேசத்திலிருந்து வேரோடும் வேரடி மண்ணோடும் களையப்படுவீர்கள். உங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சுக்குநூறாக உடைந்து சிதறும்."

உத்தம்சிங்கை 'சாகும்வரை தூக்கில் போட வேண்டும்' என்று தீர்ப்பெழுதிப் பேனாவை முறித்தார் வெள்ளைக்கார நீதிபதி ஹட்கின்ஸன். நீதிமன்றத்திலிருந்து உடனே அவரை இழுத்துச் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

'வந்தேமாதரம்! பாரத்மாகீ ஜே!' என்று நீதிமன்ற அதையே அதிரும் வகையில் முழங்கிச் சென்றார் உத்தம்சிங்.

அதன் பிறகு அங்கே நடந்ததை வெளியில் சொல்லக்கூடாது என்று பத்திரிகையாளர்களுக்கும் நீதிமன்றத்தில் இருந்தவர்களுக்கும் நீதிபதி உத்தரவு போட்டார். அந்தளவிற்கு உத்தம்சிங் பேச்சில் வேகம் இருந்தது. கேட்பவரைச் சுடும் உண்மை இருந்தது. அப்படி இருக்கும் அவனை எப்படி அதிகாரத்தை வைத்து ஓர் அறையில் பூட்டி வைக்க முடியும்?

1940 ஜூலை 31ந்தேதி தூக்குத்தண்டனைக்கான நாளாகக் குறிக்கப்பட்டது. லண்டனில் உள்ள பென்டோவில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த உத்தம்சிங் கடைசியாக சீக்கியகுரு கபீர்தாஸ் எழுதிய புத்தகம் ஒன்றைப் படித்துவிட்டு தூக்கு மேடையை நோக்கி நடந்தார். புன்னகை ததும்பிய முகத்துடன் தூக்குக் கயிற்றை முத்தமிட்டார். வந்தேமாதரம் சொல்லி பாரதமாதாவை வாழ்த்தினார்.

பிரிட்டிஷ் வழக்கப்படி வெண்ணிற துணியைப் போட்டு முகத்தை மூடி தூக்கிலட்டனர். சொந்த தேசத்து மக்களைக் கொன்றவனை ஒரு வேள்வியைப் போல 21 ஆண்டுகள் காத்திருந்து பழிதீர்த்து விடுதலை வீரரின் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

வணிக நிமித்தம் இந்தியா வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி நீண்ட காலம் இந்திய மண்ணை ஆக்கிரமித்தது. அத்தகைய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய மண்ணான லண்டன் பென்டோவில் சிறை வளாகத்தில் உத்தம்சிங் புதைக்கப்பட்டு இந்திய மாவீரன் உடலால் ஆறடிமண் இங்கிலாந்தில் ஆக்கிரமிக்கப்பட்டது வரலாற்றின் மைல்கல்.

முப்பது ஆண்டுகளுக்குப்பின் அவனது உடல் தோண்டி எடுக்கப்பட்டு இந்தியா கொண்டு வரப்பட்டது. பஞ்சாப் முழுவதும் மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட அவனது சவப்பெட்டி, உத்தம்சிங் பிறந்த சுனாம் கிராமத்தில் புதைக்கப்பட்டு அவனது தியாகத்தைப் போற்றும் நினைவுச் சின்னமும் எழுப்பப்பட்டுள்ளது.

"இது ஒரு பழிவாங்கும் சித்திரம் அல்ல. எந்த வகை ஒடுக்குமுறையானாலும் அதை எதிர்த்துப் போராடுவது பற்றிய ஒரு திரைப்படம்" என்கிறார் அதன் இயக்குநர் சித்தார்த்.

உத்தம்சிங் ஒரு பயங்கரவாதி அல்ல. சம்பந்தமில்லாத, அப்பாவி மக்களின் உயிருக்கு அவமரியாதை செய்வதுதான் பயங்கரவாதம். உத்தம்சிங்கும், பகத்சிங்கும் இலக்கை நோக்கிய, வரம்புக்குட்பட்ட வன்முறையை நம்பிய அதேசமயம் பரந்துப்பட்ட மக்களைத் திரட்டுவதை முக்கியமாகக் கொண்டிருந்தனர்.

தியாகி பகத்சிங்கின் பெயரை சீக்கிய - காலிஸ்தானி பயங்கரவாதிகள் கேடாகப் பயன் படுத்துவதற்கு எதிராகச் செய்திப் படமொன்றை ஏற்கனவே ஆனந்தபட்வர்த்தன் எடுத்திருந்தார். தியாகி உத்தம்சிங்கின் புகழையும் அவர்கள் கேடாகப் பயன்படுத்துவதை எதிர்த்திட இத்திரைப்படம் உதவும் என்கிறார் இதன் திரைக்கதை- உரையாடல் ஆசிரியர்.

இந்தியத் திரைப்படங்கள், குறிப்பாக இந்தி சினிமாக்கள், தனிநபர் காரணங்களுக்காக வெறுமனே வெறியும் ஆத்திரமும் பொங்கும் இளைஞனைக் கதாநாயகனாகச் சித்தரிக்கின்றன. குரூரமான காட்சிகள், வன்முறைக்காக வன்முறை என்பதே சினிமா வியாபாரிகளின் கரு.

ஆனால் உத்தம்சிங்கின் கதையோ, நாட்டின் மாறுபட்ட பண்பாடுகளை மத நம்பிக்கைகளையும் மதிக்கும் அதே சமயம் நாட்டு விடுதலை, சமத்துவம் என்கிற தியாக உணர்வு மிக்க விடுதலைப் போராளியின் உண்மை வரலாறு. ஆக்கப்பூர்வமான சமுதாய மாற்றத்திற்கும், நீதி நிலைநாட்டுவதற்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் வன்முறை நியாயமானது, அவசியமானது என்று வாழ்ந்து காட்டினார் உத்தம்சிங்.

பகத்சிங், உத்தம்சிங் போன்ற போராளிகளின் புரட்சிப் போராட்டங்களால் நிறைந்ததுதான் இந்தியப் விடுதலைப் போராட்ட வரலாறு. சிப்பாய்க் கலகம் எனப்படும் முதல் இந்திய சுதந்திரப் போர், சௌரிசௌரா உழவர்களின் பேரெழுச்சி, சிட்டகாங் ஆயுதக் கிடங்குச் சூறையாடல், பகத்சிங், குதிராம் போஸ், உத்தம்சிங் போன்றவர்களின் புரட்சிகர சாகசங்கள் முதல், தபால்- தந்தி ஊழியர்கள் மற்றும் மாபெரும் கடற்படை எழுச்சி என்று இலட்சக் கணக்கான மக்களின் இரத்தத்தால் சிவந்ததுதான் இந்திய விடுதலைப் போராட்டப் பாதை.

ஆனால் "கத்தியின்றி இரத்தமின்றி" காந்தியின் சத்தியாகிரகமும் அகிம்சையும் நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்ததாக பல ஆண்டுகளாகப் பொய்ப்பிரச்சாரம் நடக்கிறது.

பகத்சிங்- உத்தம்சிங் போன்றவர்கள் மதச்சார்பற்ற, பொதுவுடமைப் புரட்சியாளர்களாக

வாழ்ந்தார்கள் என்கிற உண்மையை மூடிமறைத்து அவர்களுக்குக் குடுமியும் நாமமும் சாத்தி இந்துத்துவ தேசியவாதிகளைப் போல அவர்களைச் சித்தரிக்கிறார்கள் ஆர்.எஸ்.எஸ் பாசிச மத வெறியர்கள்.

"இன்னொரு ஜாலியன்வாலாபாக்" என்று எத்தனை மக்கள் திரள் படுகொலைகளைத்தான் சொல்வது? பீகாரில் ஆர்வால் நகர மைதானத்தில் கூடிய கூலி ஏழை விவசாயிகளைச் சூழ்ந்துக் கொண்டு தோட்டா தீரும் வரை சுட்டுப் பொசுக்கினர். நாகபுரியில் மந்திரியிடம் மனு கொடுக்கப்போன ஆதிவாசிகளை முற்றுகை யிட்டு தடியடி நடத்தி நூற்றுக்கும் மேற்பட்ட வரைக் கொன்றனர். பம்பாயில் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை போட்டு அவமரி யாதை செய்ததை எதிர்த்து மறியலில் ஈடுபட்ட தாழ்த்தப்பட்டவர்களைக் கண்மண் தெரியாமல் சுட்டுக் கொன்றனர். உத்திரப்பிரதேசத்தில் சிமெண்ட் ஆலைகளைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்துப் போராடிய தொழிலாளர்கள் பெருந் திரளாகக் கொல்லப்பட்டனர். நெல்லையில் மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கொடுக்கப்போன மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழி லாளர்களை அடித்து நொறுக்கி தப்பி ஓட வழியின்றி தாமிரவருணி ஆற்றில் தள்ளி பெண்கள், குழந்தை உட்பட 17 பேரைக் கொன்றனர். குஜராத் மாநிலத்தில் 2002ல் முஸ்லிம் மக்கள் 2000க்கும் மேற்பட்டோரை ஆளும் மாநில அரசே படுகொலை செய்தது. 2018ல் வன்கொடுமைப் பாதுகாப்புச்சட்டத்தை நீர்த்துப் போகச் செய்த உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்த போராட்டத்தில் 11 தலித்துகள் கொல்லப் பட்டனர்.

இத்தகைய "ஜாலியன்வாலாபாக்" படுகொலைகளுக்கு நியாயம் பெறவேண்டாமா? இதற்கெல்லாம் பகத்சிங், உத்தம்சிங் பாதையில் பயணப்படுவதா? இல்லை, விசாரணைக்கமிசன் கண்துடைப்புகளை ஏற்பதா? சத்தியாகிரகம், அகிம்சை வழி என்று ஏமாந்து நிற்பதா?

சாதி, மத, இன, மொழி, வர்க்க ஒடுக்குமுறைச் சுரண்டலுக்கு எதிராகக் கேள்விகேட்டு தனிநப ராகவோ, குழுவாகவோ பெருந்திரளாகவோ மக்கள் எழுந்தபோதெல்லாம் அரசு எனும் அடக்குமுறைக்கருவியால் வன்முறை ஏவிவிடப் பட்டு பயபீதி விதைக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரி, போலீசுக்காரன், நீதிபதி, இராணுவச் சிப்பாய் எல்லாருமே நடை, உடை, பாவனை, தோற்றம், பேச்சு, செயல் எல்லாவற்றிலும் சாதாரணமக்களிடமிருந்து அந்நியப்பட்டு, அச்சுறுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப் பட்டிருக்கின்றனர். இப்படி ஒட்டுமொத்த அரசு அமைப்பே வன்முறையாக வடிவம் எடுத்துள்ள அதேசமயம், அதற்கெதிராக உணர்ச்சிவசப்பட்டு ஒரு குடிமகன் நியாயங்கேட்டு சுட்டு விரலை உயர்த்தினால் கூட பயங்கரவாத, தீவிரவாத முத்திரை குத்தப்பட்டு, கேள்விமுறையின்றி கொல்லப்படுகிறான்.

பகத்சிங், உத்தம்சிங் வாழ்ந்த காலம் அந்நியர் ஆட்சி இருந்தது. ரௌலட் சட்டம் போன்ற கொடிய ஆள்தூக்கிச் சட்டங்கள் இருந்தன. அவர்கள் ஆயுதம் ஏந்தினர்; எதிரிகளைப் பழிதீர்த்துத் தியாகிகளாயினர். இன்று ஆயுதந்தூக்கவோ, வன்முறையில் ஈடுபடவோ அவசியமில்லை. மக்கள் ஜனநாயக பூர்வமாகவே தமது கோரிக்கைகளை அடையலாம். ஆனால் கொடுமைகளுக்கு எதிராக நடத்தும் அறவழிப் போராட்டங்களை அரசெனும் அடக்குமுறைக் கருவிகளாகி மத்திய மாநில அரசுகள் உழைக்கும் வர்க்க உரிமைப் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதிலேயே குறியாக உள்ளன.

பகத்சிங், உத்தம்சிங் வழியிலேபோய் நாடு உண்மையான சுதந்திரத்தை அடைந்துவிடக் கூடாது என்றுதான் காந்தி- நேரு - ஜின்னாக்கள் ஆங்கிலேயக் காலனிய ஆட்சியாளர்களுடன் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்டு அரசியல் சுதந்திரத்தைப் பெற்றார்கள். அதனால்தான் இருநாடுகளின் மீதும் ஏகாதிபத்தியச் சுரண்டலும் ஒடுக்குமுறையும் தொடர்கிறது. அவர்களின் வாரிசுகள் நாட்டை மறுகாலனியாக்கும் துரோகத்தில் ஈடுபட்டுள் ளனர்.

அன்று ஒரு ரௌலட் சட்டம்தான் இருந்தது. இன்று "தடா", "பொடா", "மிசா", "மினிமிசா", தேசியப் பாதுகாப்புச் சட்டம், அரசு துரோகச் சட்டம் என்று பல கருப்புச் சட்டங்களும் "ஜாலியன் வாலாபாக் படுகொலை"யைப் போன்ற பல மக்கள் திரள் படுகொலைகளும் நீடிக்கின்றன. அன்று பகத்சிங்குகளும், உத்தம்சிங்குகளும் சட்டப்படியாவது விசாரித்துத் தூக்கிலிடப்பட்டனர். இன்றோ, போலீசுடன் மோதல் என்கிற பெயரில் கேள்விமுறையின்றி

நேரடியாகவே போராளிகள் படுகொலை செய்யப்படுகின்றனர்.

ஜாலியன் வாலாபாக் படுகொலைகள் மூலம், பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் போன்றவரைத் தூக்கிலிட்டதன் மூலம் விடுதலைத் தீயை அணைத்துவிடலாம் என்று ஆங்கிலேயர்கள் கனவு கண்டனர். ஆனால் இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்ற எழுச்சி மிக்க போராட்டங்களின் விளைவால் இந்தியா சுதந்திரமடைந்தது. அது அரசியல் சுதந்திரத்தைத் தாண்டி பொருளாதார சுதந்திரம் எனும் இலக்கு நோக்கியதாக இல்லை. மாறாக மத்திய மாநில அரசுகளை இயக்கும் பெருநிறுவன நலனுக்கான பொருளாதாரம் எனும் இலக்கு நோக்கிய பயணமாகத்தான் உள்ளது.

பகத்சிங், உத்தம்சிங் போன்றோரின் கனவான எல்லார்க்கும் எல்லாமும் கிடைக்கும் இந்தியாவாக மாற சகலபகுதி உழைக்கும் மக்களும் சுரண்டலுக்கு எதிரான ஒன்றுபட்ட போரில் கரம் கோர்த்து சமூக மாற்றக் கருவிகளாக மாறவேண்டியது காலத்தின் அவசியம்.

*(உத்தம்சிங் நினைவு நாள் ஜூலை 31)*

**-பெரணமல்லூர் சேகரன்**

# பணி ஓய்வு - பாராட்டு

## கிருஷ்ணகிரி

கிருட்டிணகிரி மாவட்ட துணைத் தலைவர் நாகராஜன் அரசு ஊழியர் சங்கப் பணி நிறைவையொட்டி பாராட்டு விழா மற்றும் கருத்தரங்கம் தேன்கனிக்கோட்டையில் 08.06.2019 அன்று நடைபெற்றது. மாவட்ட தலைவர் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு வருகை புரிந்தவர்களை மாவட்ட செயலாளர் நடராஜன் வரவேற்று பேசினார்.

மாநில செயலாளர் எம்.சௌந்தரராஜன் வாழ்த்துரைக்குப் பின், "அரசுப் பணி - சங்கப் பணி - உன்னை அர்ப்பணி" என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு கருத்துரை வழங்கினார். துறைச் சங்கத் தலைவர்கள், அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள், ஜாக்டோ-ஜியோ, சிஐடியு ஆகிய அமைப்புகளைச் சார்ந்த தலைவர்கள் நாகராஜனின் சங்கப் பணிகளை வாழ்த்திப் பேசினார்கள். மாவட்ட மையத்தின் சார்பாக 375 அரசு ஊழியர் மாத இதழ் சந்தா மாநில மையத்திடம் வழங்கப்பட்டது.

ஏற்புரையாற்றிய நாகராஜன் அரசு ஊழியர் மாத இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.10,000/-ஐ மாநில மையத்திற்கு வழங்கினார். பாராட்டு விழா - கருத்தரங்கில் 80 பெண் ஊழியர்கள் உட்பட 240 பேர் கலந்து கொண்டனர். மாவட்ட பொருளாளர் தேவராஜ் நன்றி கூறினார்.

## திண்டுக்கல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க முன்னாள் வட்ட தலைவர் தாமோதரன் பணி ஓய்வு விழா திண்டுக்கல்லில் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் முபாரக் அலி தலைமையில் நடைபெற்ற விழாவில் மாவட்ட தலைவர் விஜயகுமார், அனைத்து துறை ஓய்வூதியர் சங்க தலைவர் ஜெயசீலன், முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் சசி, மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவன தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் வெங்கடேசன், பொது செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். தாமோதரன் ஏற்புரை வழங்கினார் ❖

## தருமபுரியில் கருத்தரங்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் சிறப்பு கருத்தரங்கம் தருமபுரி நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் வரவேற்றார். “வையத் தலைமைக் கொள்” என்ற தலைப்பில் மாநில செயலாளர் எம்.சௌந்தரராஜன் பேசினார். கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் நடராஜன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர். ❖

**இரத்த தானம், கண் தானம், உடல் தானம் செய்து உயிருக்கு போராடும் உயிர்களைக் காப்போம்!**

# மாநிலத் தலைவர் மீது நடவடிக்கை எடுத்த தமிழக அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து துறை ஊழியர்களின் வாழ்வை மேம்படுத்த தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயலாற்றிய சமரசமற்ற போராளியாக, தலைசிறந்த தலைவராக, உற்ற தோழனாக விளங்கியவர் அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன் என்பதை தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் நன்கு அறிவர். அவர் தனது 32 வருட அரசு பணியில் அப்பழுக்கற்ற முறையில் நேர்மையாகவும், சீரிய முறையிலும் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தமிழ்நாட்டில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் பரந்த மேடையான ஜாக்டோ-ஜியோ அமைப்பினை ஒருங்கிணைத்து பலகட்ட வீரம் செறிந்த போராட்டங்களை தலைமை தாங்கி திறம்பட வழிநடத்தி வெற்றிக்கு வித்திட்டார் என்பதுடன் அரசுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு தலைமை தாங்கியவர். இதனை பொறுத்து கொள்ளாத ஆட்சியாளர்களும், அதிகாரவர்க்கமும் பழிவாங்கும் நோக்கில் அப்பழுக்கற்ற முறையில் பணியாற்றிய மாநில தலைவரை அரசு பணியில் ஓய்வு பெறும் நாளில், பழைய ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையைக் காரணம் கூறி அரசு ஊழியர் ஓய்வுபெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம் செய்யக்கூடாது என்கின்ற அரசு ஆணைகள் மற்றும் நீதி மன்ற தீர்ப்பாணைகளுக்கு முரணாக தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஆட்சியாளர்களின் இந்த கொடுஞ்செயலுக்கு வன்மையான கண்டனத்தை பதிவு செய்திடும் வகையிலும் அவர் மீதான தற்காலிக பணிநீக்க உத்தரவை தமிழக அரசும், விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரும் உடனே ரத்து செய்திட வேண்டுமென வலியுறுத்தி தமிழகம் முழுவதும் 3.6.2019 அன்று மாவட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## நாகப்பட்டினம்

03.06.19 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்



மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார்.

துறைவாரி சங்க நிர்வாகிகள் எஸ்.ஜோதிமணி, எல்.பிரேம்சந்திரன், வி.தேன்மொழி, எஸ்.மோகன், வி.கணேசன், என்.ஜீவானந்தம், சொ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.சித்ரா காந்தி, வி.சரவணன், சிஐடியு சீனி.மணி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க முன்னாள் மாநிலப் பொருளாளர் டி.நாகராஜன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார். 100 பெண்கள் உட்பட 500-க்கும் மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## திண்டுக்கல்

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் விஜயகுமார் தலைமையேற்றார். மாவட்ட செயலாளர் முபாரக் அலி விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் ராஜசேகர், வருவாய்



துறை அலுவலர்கள் சங்கத்தின் மங்களபாண்டியன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் ராமு, முன்னால் மாநில துணைத் தலைவர் கிருஷ்ணசாமி, ஊரக வளர்ச்சித் துறையின் சுப்பிரமணியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

## கிருஷ்ணகிரி

மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம் - கோபால கண்ணன், சத்துணவு ஊழியர் சங்கம் - தேவராஜ், கிராம சுகாதார செவிலியர் சங்கம் - தமிழரசி, பட்டு வளர்ச்சித் துறை ஊழியர் சங்கம் - செல்வகுமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். வட்ட செயலாளர் அ, மணி நன்றி கூறினார். தர்ணா போராட்டத்தில் 40 பெண் ஊழியர் உட்பட 146 பேர் கலந்து கொண்டனர்.

## மதுரை

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் ஜெயராஜ ராஜேஸ்வரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் நீதிராஜா விளக்க உரையும், ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் கே.பி.ஓ. சுரேஷ், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில பொருளாளர் விஜயபாஸ்கர், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொருளாளர் தமிழ், தமிழ்நாடு ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் ஒச்சுக்காளை, தமிழ்நாடு சத்துணவு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் நூர்ஜகான், தமிழ்நாடு வருவாய் கிராம உதவியாளர் சங்கத்தின் மாநில பிரச்சார செயலாளர் மாரியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் ஆ.செல்வம் நிறைவுரையாற்றினார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட இணைச் செயலாளர் நன்றி கூறினார். இதில் 27 பெண்கள் உட்பட மொத்தம் 240 பேர் கலந்து கொண்டனர்



## கடலூர்

மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரை யாற்றினர். பா.மகேஷ், சண்முகசிகாமணி, ஆர்.நடராஜன், எஸ்.கருணாகரன், பி.வெங்கடேசன் மற்றும் ப.துளசி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில செயலாளர் என்.ஜனார்த்தனன் நிறைவுரையாற்றினார். மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் நன்றி கூறினார் இதில் 17 பெண்கள் உள்ளிட்ட 550க்கும் மேற்ப்பட்டவர்கள் கலந்துக் கொண்டனர்.

## தருமபுரி

மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாநில துணை தலைவர் எஸ்.தமிழ்செல்வி, மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணை தலைவர்கள் எம்.யோகராசு, எம்.சிவப்பிரகாசம், ஜி.பழனியம்மாள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாநில செயலாளர் ஆர்.ஆறுமுகம், மாவட்ட தலைவர் என்.ருத்ரையன், மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், ஜாக்டோ-ஜியோ தலைவர்கள் பி.எம்.கௌரன், பொன்.ரத்தினம், ராசா ஆனந்தன், எம்.பழனி, நில அளவை அலுவலர் ஒன்றிப்பின் மாநில துணை தலைவர் அண்ணாகுபேரன், உயர்நிலை, மேல்நிலை ப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட



செயலாளர் சா.கவிதா, அங்கன்வாடி ஊழியர் சங்க மாவட்டதலைவர் ஏ.தெய்வானை ஓய்வு பெற்றோர் அமைப்பின் மாவட்ட தலைவர் சௌந்தரம் ஆகியோர் கோரிக்கையை விளக்கி பேசினார்.

❖

# அரசு ஊழியர் சங்க வட்டக் கிளை மாநாடுகள்

## குறளகம்

வடசென்னை குறளகம் பகுதிக் குழுவின் *10வது மாநாடு 29.6.2019* அன்று காதி வாரிய கூட்டரங்கில் தலைவர் சு.பத்மா தலைமையில் நடைபெற்றது. இணைச் செயலாளர் ஜி.மோகன் வரவேற்றார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி துவக்கவுரையாற்றினார். முன்னதாக நடைபெற்ற






கொடியேற்று நிகழ்ச்சியில் மூத்த தோழர் செல்வராணி சங்கக் கொடியையும், சம்மேளனக் கொடியை ஜெ.பட்டாபியும் ஏற்றி வைத்தனர். தியாகிகள் அஞ்சலிக்குப் பின்னர் மாநாடு நடைபெற்றது. *38* பெண்கள் உள்ளிட்ட *83* பிரதிநிதிகள் பங்கேற்றனர். பின்னர் நடைபெற்ற புதிய நிர்வாகிகள் தேர்வில் தலைவராக கி.மணிகண்டன், துணைத் தலைவர்களாக கே.செல்வராணி, த.வேல்முருகன், தாமோதரன், செயலாளராக த.ஏழுமலை, இணைச் செயலாளர்களாக ஞா.மோகன், ஞானசரஸ்வதி, ஓம்கணபதி, பொருளாளராக ஆ.கோபிநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். நிறைவாக மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி உரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் நரேஷ் நன்றி கூறினார்.

## நல்லம்பள்ளி

நல்லம்பள்ளி வட்டம் துவங்கப்பட்ட பிறகு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் நல்லம்பள்ளி வட்டக் கிளையின் முதல் வட்ட மாநாடு *14.06.2019* அன்று மாலை *5.00* மணி அளவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே வட்ட





தலைவர் ராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்றது. இணை செயலாளர் செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

## கிருஷ்ணகிரி

*22.6.2019* அன்று கிருஷ்ணகிரி வட்டக்கிளை மாநாடு நடைபெற்றது. *20* பெண்கள் உட்பட் *110* பேர் பங்கேற்றனர். தலைவராக ஜி.வெங்கடேசன், துணைத் தலைவர்களாக கே.கோபாலகிருஷ்ணன், கே.தேவன், செயலாளராக ஏ.மணி, இணைச் செயலாளர்களாக ஆர்.தமிழரசி, டி.ஹரீஷ்பாபு, கே.சின்னசாமி, டி.கிருஷ்ணன், பொருளாளராக கே.பெருமாள், மாவட்ட செயற்குழு உறுப்பினராக எஸ்.சதானந்தம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## சூளகிரி

*23.6.2019* அன்று நடைபெற்ற சூளகிரி வட்டக் கிளை மாநாட்டில் *35* பெண்கள் உட்பட *85* பேர் பங்கேற்றனர். இதில் தலைவராக எம்.சப்தமோகன், துணைத் தலைவர்களாக கே.ஜகதாம்பிகா, ஜி.முருகன், செயலாளரக கே.கனகவள்ளி, இணைச் செயலாளர்களாக பி.ஜெபராஜ், எஸ்.குமரேசன், பொருளாளராக சி.தினேஷ், மாவட்ட செயற்குழு உறுப்பினராக எஸ்.வினோத் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## பாலக்கோடு

பாலக்கோடு வட்டக் கிளையின் *12வது* வட்ட மாநாடு *18.06.2019* இன்று மாலை *5.00* மணி






அளவில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே வட்ட தலைவர் குணசேகரன் தலைமையில் நடைபெற்றது.

வட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் லூசா மேரி அஞ்சலி உரையும், இணை செயலாளர் பாலைய்யா வரவேற்புரை ஆற்றினார்

மாவட்ட தலைவர் வி. சுருளி நாதன் வட்ட மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். சண்முகசுந்தரம் செயலாளர் அறிக்கையை சமர்பித்தார். மாவட்ட பொருளாளர் புகழேந்தி, மாவட்ட இணைச் செயலாளர் ராஜேஸ்வரி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

வட்ட தலைவராக குணசேகரன், செயலாளராக நாகராஜன், பொருளாளராக தமிழ்செல்வன், துணைத் தலைவர்களாக செந்தில்குமார், சண்முகம், வி. பாலாஜி, இணைச் செயலாளர்களாக சதீஸ்குமார், சிவக்குமார், மஞ்சுளா, மாவட்ட செயற்குழு உறுப்பினராக கலைச்செல்வி, வட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராக லூசா மேரி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டச் செயலாளர் சேகர் மாநாட்டை முடித்து வைத்து நிறைவுரையாற்றினார். சதீஸ்குமார் நன்றி கூறினார்

## பென்னாகரம்

*12-வது வட்ட மாநாடு 20.06.2019 வியாழன்* மாலை பேரூராட்சி கூட்டரங்கில் வட்ட தலைவர் வி. திம்மராயன் தலைமையில் நடைபெற்றது. ஜெயலட்சுமி அஞ்சலி உரை நிகழ்த்தினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி.பாபு மாநாட்டிற்கு வந்தவர்களை வரவேற்றார். மாநாட்டை துவக்கி மாவட்ட செயலாளர் சேகர் உரையாற்றினார். வட்ட செயலாளர் பெருமாள் செயலாளர் அறிக்கையை சமர்பித்தார். வட்ட பொருளாளர் வேலவன் வரவு-செலவு அறிக்கையை சமர்பித்தார். மாநாட்டை வாழ்த்தி மாவட்ட துணைத் தலைவர் வி. யோகராசு பேசினார். பின்னர் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தலைவராக எம்.திம்மராயன், செயலாளராக எம்.பெருமாள், பொருளாளராக எம்.பாலசந்திரன், துணைத் தலைவர்களாக எம்.தனபால், சி.முருகன், ராஜா, இணைச் செயலாளர்களாக எம்.சங்கர், எல்.எஸ்.ஜார்ஜ், கே.வேலவன், மாவட்ட செயற்குழு உறுப்பினராக கே.ரமணி, மகளிர் துணைக்குழு அமைப்பாளராக எம்.ஜெயலட்சுமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்ட துணைத் தலைவர் எம்.சிவப்பிரகாசம் நிறைவுரையாற்றினார். கே.மணி நன்றி கூறினார்.

❖

## வடசென்னையில் எழுச்சி நாள் கூட்டம்

எழுச்சி நாள் மற்றும் மாலை நேர தர்ணா போராட்டம் வடசென்னை மாவட்டத்தின் சார்பில் குறளக வளாகத்தில் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். மாவட்ட இணைச் செயலாளர்கள் வி.விஜயகுமரன், ஜெ.சரஸ்வதி, மாவட்ட துணைத் தலைவர்கள் பா.சுந்தரம்மாள், ப்பி.பத்மநாபன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். பகுதிக் குழுக்கள் சார்பாக த.ஏழுமலை, வை.சிவக்குமார், வாசுகி, விவேகானந்தன், காமராஜ் மற்றும் துறைச் சங்க நிர்வாகிகள் வேல்முருகன், ஜி.மோகன், சாதிக்பாஷா, அமரேசன், ஜி.வேலு, சீனிவாசலு, தவ்லத்துல்லா, லட்சுமணன், கோபிநாதன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நிறைவாக மு.சுப்ரமணியன் மீதான பழிவாங்கும் நடவடிக்கையை திரும்பப் பெற வலியுறுத்தி மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி கண்டன உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எஸ்.பார்த்திபன் நன்றி கூறினார். இதில் 35 பெண்கள் உட்பட 75 பேர் பங்கேற்றனர். ❖

**இரவு நேரங்களில் அதிக நேரம் தொலைக்காட்சியை பார்ப்பது கண்ணுக்கு நல்லதல்ல.**

# செவிலியர் போராட்டத்திற்கு ஆதரவு ஆர்ப்பாட்டம்

## 11.06.2019 முதல் 13.06.2019 முடிய காத்திருப்பு போராட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவரும், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாநிலத் தலைவருமாகிய மு.சுப்பிரமணியன், தமிழ்நாடு நர்சுகள் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் நல்லம்மாள், மாவட்டத் தலைவர் கார்த்திக், மாவட்டச் செயலாளர் தனலட்சுமி மற்றும் மாவட்டப் பொருளாளர் செல்வராணி ஆகிய சங்க நிர்வாகிகள் கரூர், மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வரால் சஸ்பெண்ட் செய்யப்பட்டதைக் கண்டித்து 11.06.2019 முதல் 13.06.2019 முடிய கரூர் மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முன்பாக காத்திருப்புப் போராட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதில் செவிலியர் சங்கத்தினர், அரசு ஊழியர் சங்கத்தின் வட்ட/மாவட்ட நிர்வாகிகள், அனைத்து துறையைச் சார்ந்த துறைவாரி சங்கத் தலைவர்கள் மற்றும் இந்திய தொழிற்சங்க மையத்தின் கரூர் மாவட்டத் தலைவர் ஜீவானந்தம், மாவட்டச்செயலாளர் முருகேசன் உட்பட மற்ற நிர்வாகிகள் மற்றும் அகில இந்திய காப்பீட்டு ஊழியர் சங்கத்தின் தஞ்சை கோட்டத் தலைவர் வி.கணேசன் உட்பட பிற நிர்வாகிகள், அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் சாமுவேல் சுந்தரபாண்டியன், மாவட்டச் செயலாளர் வி.மோகன்குமார் உட்பட அச்சங்கத்தின் பிற நிர்வாகிகள் மற்றும் பி.எஸ்.என்.எல். ஊழியர் சங்கத்தின் சார்பில் பாலசுப்பிரமணி, தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் ஐ.ஜான்பாட்ஷா உட்பட ஏனைய தொழிற்சங்கத் தலைவர்கள் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்ததோடு, இதனைக் கண்டித்து இந்திய தொழிற்சங்க மையத்தின் சார்பில் 13.06.2019 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தினையும் நடத்தினர். போராட்டம் எழுச்சியோடு நடைபெற்றது. போராட்டத்தின் போது கரூர், மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து முறையீடு செய்யப்பட்டது. அவரது வழிகாட்டுதலின்படி, கரூர், மாவட்ட மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வரை சந்தித்து முறையீடு செய்யப்பட்டது. அது பயனளிக்காததால் போராட்டம் எழுச்சியோடு தொடர்ந்தது. இறுதியில் 13.06.2019 அன்று கரூர், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் கரூர்,கோட்டாட்சியர், மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் முன்னிலையில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் சங்கத்தின் சார்பில் நமது சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர்கள் ஞானத்தம்பி, எஸ்.தமிழ்ச்செல்வி, மு.சுப்பிரமணியன், மாவட்டத் தலைவர் மகாவிஷ்ணன், மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல் மற்றும் தமிழ்நாடு நர்சுகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் நல்லம்மாள், மாவட்டத் தலைவர் கார்த்திக், மாவட்டச் செயலாளர் தனலட்சுமி மற்றும் மாவட்டப் பொருளாளர் செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையின் முடிவில் கரூர் மாவட்ட ஆட்சியர் உறுதிமொழி அளித்ததன்பேரில் போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. இந்த போராட்டத்தில் 60க்கும் மேற்பட்ட பெண் செவிலியர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டினம்

மாவட்ட மையம் சார்பில் 12.06.19 அன்று காலை மாவட்ட இணைச் செயலாளர் து.இளவரசன் தலைமையில் நாகை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். நாகை தொழிற்சங்கக் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் சு.மணி, மருத்துவ தேர்வுக் கழக செவிலியர் மேம்பாட்டு சங்க மாவட்டத் தலைவர் ரேவதி ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாவட்ட துணைத் தலைவர் எஸ்.ஜோதிமணி நிறைவுரையாற்றினார்.



மாவட்ட இணைச் செயலாளர் கே.இராஜு, வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன், ஓய்வூதியர் சங்க மாவட்டப் பொருளாளர் பி.ஆசைத்தம்பி, நாகை வட்டத் தலைவர் எம்.பி.குணசேகரன், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கத் தலைவர் வி.பாலசுப்பிரமணியன், அரசு நர்சுகள் சங்க மாவட்டத் தலைவர் ப.ஜீவானந்தம் உள்ளிட்டு பல்வேறு சங்கத்தலைவர் மற்றும் செவியர் 50 ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார்.

இதே கோரிக்கைகளை வலியுறுத்தி மதியம் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**மதுரை**



மதுரை மாவட்டத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் 14 பெண்கள் உட்பட 56 பேர் கலந்து கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில பொருளாளர் ஜெயச்சந்திரன் வாழ்த்திப் பேசினார். ❖

## கிருஷ்ணகிரி

மாவட்ட ஆட்சியரகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் பி.சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் ஆர்.நடராஜன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக மாவட்ட தலைவர் பிரதாப், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்க மாவட்ட தலைர் சரவணன், சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தேவராஜ், ஊரக வளர்ச்சித் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கிருட்டிணகிரி வட்ட தலைவர் வெங்கடேசன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் 42 பெண் ஊழியர்கள் உட்பட 220 பேர் கலந்து கொண்டனர். ❖

## செல்லிடைபேசி

கையடக்கத்தில்
உலகை கட்டிப் போட்ட
பெரும்பூதம்...

வீடுகளை
தனித்தீவுகளால்
மாற்றிய
ஆழிப்பெருங்கடல்...

மனிதர்களிடமிருந்து
அன்பை
அரித்தெடுத்த
செல்...

வதந்திகளுக்கு
இறக்கை கட்டி
வலம் வரச்செய்யும்
மௌன ரதம்

காணாமல் போன
குழந்தைகளை
கண்டறியச் செய்யும்
உலக காவல்காரன்

அறைக்குள் நடக்கும்
அந்தரங்கள்
உட்பட பல
குற்றங்களை
உலகிற்கு
அறிவிப்புச் செய்யும்
மூன்றாம்கண்...

உன்னதம்
அறிந்து
உயர்விற்காய்
பயன்படுத்துவோம்...

- **முனைவர் மதுரை சுகி**

## சம்மேளன செயற்குழு

01.06.2019 அன்று சண்டிகாரில் நடைபெற்ற AISGEF தேசிய செயற்குழு கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக அறிக்கை சமர்பித்தும், பொதுச் செயலாளரின் அறிக்கை மீதான விவாதத்திலும் கலந்து கொண்டு மாநில செயலாளரும் தேசிய செயற்குழு உறுப்பினருமான எம்.சௌந்தரராஜன் உரையாற்றினார்.

# வட்ட அளவில், மாவட்ட அளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்

கருவூலத் துறையை டிஜிட்டல் முறைக்கு மாற்றும் தமிழக அரசின் நடவடிக்கையை கண்டித்து அரசு ஊழியர் சங்கம் சார்பாக தமிழகம் முழுவதும் மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் கருவூலத் துறை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## வடசென்னை

25.3.2019 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி தலைமையேற்றார். மாவட்ட பொருளாளர் எஸ்.பார்த்திபன் கண்டன உரையாற்றினார். மாவட்ட துணைத் தலைவர் பா.சுந்தரம்மமாள் விளக்கவுரையாற்றினார். நிறைவாக குறளகம் பகுதி செயலாளர் த.ஏழுமலை நன்றி கூறினார். இதில் 25 பெண் ஊழியர்கள் உட்பட 72 பேர் கலந்து கொண்டனர்.

## தென்சென்னை

தென்சென்னை சார்பாக சம்பள கணக்கு அலுவலகம் (தெற்கு), தாடண்டர் நகர், சைதாப்பேட்டையில் 25.6.19 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது. மாவட்ட தலைவர் சா.டானியல் ஜெயசிங் தலைமை தாங்கினார். மாவட்ட துணை தலைவர் உ. சுமதி கண்டன உரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் எம். வெங்கடேசன் சிறப்புரை ஆற்றினார். மாவட்ட துணைத் தலைவர் நா.வினோத் குமார் நன்றி கூறினார். ஆர்பாட்டத்தில் 300-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கடலூர்

கடலூர் மாவட்ட கருவூல அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளும், துறைவாரி சங்க உறுப்பினர்களும் பங்கேற்று வட்ட அளவிலும் மாவட்ட அளவிலும் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்று தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

## நாகப்பட்டினம்

அரசு ஊழியர்களுக்கு புதிய நெருக்கடியை முறியடிப்போம் என்ற முழக்கத்தோடு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி நாகப்பட்டினம் வட்ட மையம் சார்பில் நாகப்பட்டினம் சார்நிலை கருவூலம் முன்பு வட்ட துணைத் தலைவர் சி.வாசு தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் மற்றும் கருவூல கணக்குத்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் ராஜவேல் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். ஓய்வுபெற்ற அனைத்து ஆசிரியர் சங்க மாநிலக்குழு உறுப்பினர் வி.பாலசுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். வட்டப் பொருளாளர் சி.பாலசுப்பிரமணியன் நன்றியுரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சங்க மாநில செயற்குழு முடிவின்படி 25.06.2019 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட கருவூலம் முன்பாக மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் விளக்கவுரையாற்றினார்.

வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.ஜோதிமணி, அரசு ஊழியர் சங்க குத்தாலம் வட்டம் செயலாளர் எம்.இராமச்சந்திரன், கீழ்வேளூர் வட்டம் செயலாளர் என்.புகழேந்தி, நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கண்டன உரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் எம்.நடராஜன் நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்டம் பொருளாளர் பா.ராணி நன்றியுரையாற்றினார்.

வேதாரண்யம், கீழ்வேளூர், சீர்காழி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஆகிய இடங்களில் உள்ள சார்நிலை கருவூலங்கள் முன்பும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கடலூர்

மாவட்ட தலைவர் ஆர்.பாலசுப்ரமணியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் எல்.அரிகிருஷ்ணன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி எஸ்.வெங்கடேசன் மாவட்ட இணை செயலாளர், வட்ட செயலாளர்

பா.ஆசைத்தம்பி, பொதுப்பணித் துறை ஆட்சி மற்றும் கணக்கு அலுவலர் சங்க மாநில செயலாளர் கோ.வெங்கடாஜலபதி, மருத்துவத் துறை நிர்வாக ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஆர்.பாஸ்கரன், தமிழ்நாடு சாலைப் பணியாளர் சங்க மாநிலத் துணை தலைவர் கே.இரவி, மற்றும் மகளிர் துணைக்குழு அமைப்பாளர் ப.துளசி ஆகியோர் கண்டனவுரையாற்றினர். இறுதியாக தமிழ்நாடு அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்க மாவட்ட துணைத் தலைவர் சி.குழந்தைவேலு முடித்து வைத்து பேசினார். மாவட்ட பொருளாளர் டி.இரவிச்சந்திரன் நன்றி கூறினார் ஆர்ப்பாட்டத்தில் 74 ஆண்கள் உட்பட 81 தோழர்கள் கலந்துக் கொண்டனர்.

## ஈரோடு

ஈரோடு மாவட்ட துணைத் தலைவர் 25.6.2019 அன்று ரமேஷ் தலைமையில் நடைபெற்றது மாவட்டச் செயலாளர் வெங்கிடு விளக்கவுரையற்றினார். கூட்டத்தில் கிராம உதவியாளர் சங்க மாநில தலைவர் ஆர்.ராஜசேகர், சத்துணவு ஊழியர் சங்க முன்னாள் மாநில செயலாளர் கண்ணன் ஊரக வளர்ச்சி துறை அர்த்தனரீஸ்வரன் ஆகியோர் வாழ்த்தி பேசினார். மாவட்ட பொருலாளர் உஷாராணி நன்றி கூறினார்

## காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டக் கருவூலம் முன்பு மாலை மாவட்டத் தலைவர் வெ.லெனின் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் சா.முகம்மது உசேன் விளக்கவுரையாற்றினார். அனைத்து ஓய்வூதியர் சங்க முன்னாள் மாவட்ட இணைச் செயலாளர் தினகரன் கண்டன உரையாற்றினார். சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் நிறைவுரையாற்றினார். வட்டச் செயலாளர் வெ.விக்டர் சுரேஷ்குமார் நன்றி கூறினார். இதில் 24 பெண்கள் உட்பட 110 பேர் பங்கேற்றனர்.

## கரூர்

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் மு.மகாவிஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்டச்செயலாளர் கே.சக்திவேல் கோரிக்கை விளக்கவுரையாற்றினார். தமிழ்நாடு ஆய்வக நுட்புனர் சங்கத்தின் மாநிலச்செயலாளர் செல்வராணி, தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் மாநிலப்பொதுச்செயலாளர் தாமோதரன், தமிழ்நாடு மருந்தாளுநர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் சுரேஷ்குமார் மற்றும் மாவட்டச் செயலாளர் இளங்கோ, தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்டத் துணைத் தலைவர் பாலகிருஷ்ணன் மற்றும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் சரவணன், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்தின் மாவட்டப்பொருளாளர் செந்தில் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணி சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பொன்.ஜெயராம் நன்றியுரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## தருமபுரி

மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டசெயலாளர் ஏ.சேகர், மகளிர் துணைக் குழு மாவட்ட அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஜி.பழனியம்மாள் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிபேசினர்.

TNRDOA மாவட்ட இணைச் செயலாளர் வேலுமணி, TNPLOA மாவட்ட செயலாளர் பிரபாகரன் மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் முன்னணி ஊழியர்கள் திரளாக பங்கேற்றனர்.

## திண்டுக்கல்

மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் முபாரக் அலி விளக்கவுரையாற்றினார். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் ராஜசேகர், வருவாய் துறை அலுவலர்கள் சங்க மாவட்ட செயலாளர் சுகந்தி, சாலைப் பணியாளர் சங்க மாநில செயலாளர் ராஜமாணிக்கம், கூட்டுறவு துறை ஊழியர் சங்க மாநில செயலாளர் பிச்சைவேலு, ஊரக வளர்ச்சித் துறை அனைத்து ஓய்வூதியர் சங்க மாநில தலைவர் ராமமூர்த்தி, பட்டதாரி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன் ஆகியோர் கண்டனவுரை ஆற்றினர். மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன் நன்றி கூறினார்

❖

# ஏழைத்தாய் மகனின் அறைகூவல்

ஒரே தேசம்
ஒரே மொழி
ஒரே பண்பாடு
ஒரே கலாச்சாரம்

இவற்றோடு இப்போது

ஒரே சட்டம்
ஒரே தேர்தல்

ஓங்கி ஒலிக்கிறது
எங்கும் ஜொலிக்கிறது
ஸ்வஸ்திக் சின்னமணிந்து

நாங்கள் சொல்வதெல்லாம் உண்மை
உண்மையைத் தவிர வேறில்லை

அதற்கென ஓர் அமைச்சர்
அதற்கான கோயபல்ஸ் தேவையில்லை

எல்லோருமே அதற்கான
தகுதி படைத்தவர்கள்

நீட்டின் பயனை
நீட்டி முழக்கும்
தமிழிசையைச் செவிமடுக்க
தமிழர்களே தமிழர்களே
கொஞ்சம் காது கொடுங்களேன்

இனி நீங்கள்
எளிதாக மறக்கலாம்
நாற்பத்தைந்தாண்டு கால
பற்றியெரியும்
உச்ச வேலையின்மை

குடிப்பதற்கே தண்ணீர் இல்லாதபோது
கோதாவரி கிருஷ்ணா
இணைப்பு பற்றிய
பரப்புரை ஒன்று போதும்
தென்னிந்தியா வெள்ளக்காடாகும்

பிறகென்ன
ஐந்தாண்டில் முடியாதது
ஆறாம் ஆண்டில் முடியும்

விவசாயிகளுக்கான
ஒன்றரை மடங்கு வருவாய்
நன்றரைக்கலாம் வெறும் வாயால்

நெல்கொழிக்கும் பூமி
பொன்கொழிக்கப் போகிறது
எரிவாயு ஒப்பந்தம்
மீத்தேன் ஹைட்ரோகார்பன்
என்பது தேன் வந்து பாயும் காதில்
கைநிறைய பைநிறைய பணத்துடன்
கொஞ்சம் நிலம் கொடுத்தால்
மஞ்சம் எளிதாகும்

எட்டுவழிச்சாலை அழைக்கிறது
எட்டுத் திக்கும் திகைக்க
வாயுவேக மனோவேகப் பயணம்
சேலம் முதல் சென்னை வரை
காலம் கனிந்தது கடிதில் வர
எண்ணிப் பார்த்திராத இழப்பீடு
வண்ணமயமான எதிர்காலம்
விவசாயிகளுக்கு மட்டுமல்ல
எல்லோருக்கும்

ஐம்பத்தாறங்குலத்துடன்
ஆஜானுபாகுவாய் வலம் வரும் மன்னர்
புஜபல பராக்கிரங்களுக்கு முன்
பிரச்சனைகள் பஸ்பமாகும்
துல்லியத் தாக்குதல்
அண்டை நாட்டுடன் மட்டுமல்ல
மட்டை விளையாட்டில் கூட

அந்நிய தேசத்தார்க்குப் புரிகிறது
பிண்ணிய சிவப்புக் கம்பள வரவேற்பில் நம்
மன்னர்

இங்கு மட்டும்
பொழுதெலாம் திரும்பிப்போ முழக்கம்
திரும்பி மீண்டும் மன்னராய்
கொலுவீற்றிக் கோலோச்சும்
கண்கொள்ளாக் காட்சி
ஒற்றை இடம்கூடத் தராத
நீங்களும் சாட்சி

புதிய தேசம்
அகண்ட தேசம்
ஒற்றை மொழி
தேச மொழி
புதிய பண்பாடு
புதிய கலாச்சாரம்
நதிபோல ஓடிக் கொண்டேயிருப்போம்

எல்லா அவலங்களும்
அடித்துச் செல்லும்
புனித கங்கையில்
காவிரியையும் இணைத்தே

மன்னரின் தூதர்கள்
வாய்த்த நல் சேவகர்கள்
ஆதலினால் அறிவுரைப்படி
ஆலயங்கள்தோறும்
பூசை புனஸ்காரங்கள்
அரை நிர்வாண
அண்டாநீர் மந்திரம் மந்திரங்கள்
வேத விற்பன்னர்களின் யாகசாலைகள்

வருண பகவான் கண் திறப்பான்
வான் மழை பொழியும்
நீர்நிலை பெருகும்

கர்மாவைச் செய்
பலனை எதிர்பாராதே

எது நடந்ததோ
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ
அதுநன்றாகவே நடக்கும்
மூன்றுக்கும் முத்தாய்ப்பாய்
மோடியே சாட்சி

ஒரே தேசம்
ஒரே மொழி
ஒரே பண்பாடு
ஒரே கலாச்சாரம்
ஒரே சட்டம்
ஒரே தேர்தல்

இவை மட்டுமே ஒலிக்கட்டும்
மற்றெவையும் நினைவில் வராதிருக்கட்டும்

பகவான் படியளப்பான்
மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்

பதினேழாம் மக்களவையில்
ஏழைத்தாயின் மகன்
மன்னராய் விடுக்கும் அறைகூவல்
திண்ணமாய் அசைக்கும் அடிமனதை

- **பெரணமல்லூர் சேகரன்**

---

# கிருஷ்ணகிரியில் ஆர்ப்பாட்டம்

*07.06.2019* அன்று கிருட்டிணகிரி மாவட்டத்தில் கிருட்டிணகிரி, ஒசூர், தேன்கனிக்கோட்டை, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய 5 சார்நிலை கருவூல அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் 51 பெண் ஊழியர்கள் உட்பட 217 பேர் கலந்து கொண்டனர்.




*25.6.2019* அன்று மாவட்ட கருவூலம் முன்பு மாவட்டத் தலைவர் பி.சந்திரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் என்.பிரதாப், ஊரக வளர்ச்சித் துறையின் வி.தேவராஜ், பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்தின் சரவணன், சத்துணவு ஊழியர் சங்கத்தின் எம்.சப்தமோகன், சாலைப் பணியாளர் சங்கத்தின் எஸ்.சதானந்தன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். வட்டத் தலைவர் ஜி.வெங்கடேசன் நன்றி கூறினார். இதில் 22 பெண்கள் உட்பட 120 பேர் பங்கேற்றனர்.

❖

# தண்ணீரும்... ஐ.நா.வின் அரசியலும்

*பசியாறுவதற்கு உணவை உட்கொள்ளுங்கள். தாகம் தணிப்பதற்கு நீரை அருந்துங்கள். ஒரு பூவின் அமைப்பையும் நறுமணத்தையும் அழிக்காமல் பூவில் இருந்து தேனை சுவைக்கும் வண்ணத்துப் பூச்சியைப் போல, வாழ்வின் அடிப்படை தேவையை நுகருங்கள்.*

*- கௌதம புத்தர்*

நாமும் நமது முன்னோடிகளும் 20 ஆண்டுகள் நினைவுகளை பின்னோக்கி பார்த்தோமானால் நாம் பிறந்து வாழ்ந்த ஊரில் என்னவெல்லாம் இருந்தன? பச்சை பசேல் விவசாயம், தாமரை பூத்திருக்கும் கோயில், குளம், நன்னீர் தேங்கி நிற்கும் ஊருணி, சலசலத்தோடும் வாய்க்கால்கள், ஓடைகள், ஊற்று நீர் பெருக்கெடுக்கும் கிணறுகள்... என நீரும் நீர் சார்ந்ததுமான அந்த நாட்கள் நாம் வாழ்ந்தவைதான். மழைக் காலத்தில் கரையை தொட்டு ததும்பி நிற்கும் குளத்து நீர் நமது ஊரிலும் இருந்தது. மழைக்கால மாலைப் பொழுதில் ஈசல்கள் பறந்தன. மின்மினிகள் ஒளிர்ந்தன. கோடை வெயிலில் குளத்து நீர் வற்றி சுருங்கும்போது ஊரோடு சேர்ந்து சேற்று நீர் பிடித்து மகிழ்ந்ததும், நாம் வாழ்ந்த வாழ்வின் ஒரு பகுதி.

சிட்டுக் குருவிகள் நமது வீட்டுக் கண்ணாடியில் முகம் பார்த்த நமது நண்பர்களோடு காடு, மேடுகள் சுற்றி விளையாடினீர்கள். பட்டாம்பூச்சிகளும், தட்டான்களும் நம்மை பறக்க அழைத்தன. உங்கள் வீட்டின் பின்பக்கத்தில் மாட்டு கொட்டகை இருந்தது. அதில் காளை மாடுகளும், பசு மாடுகளும் எப்போதும் நிறைந்திருந்தன. மறக்க முடியாத பெரும்பாலோரின் கிராமத்து இளமை கால வாழ்வின் அங்கம் இது...

இவை எதுவும் இன்று இல்லை. ஆற்றில், குளத்தில், கிணற்றில், ஏரியில், ஊருணியில், வாய்க்காலில், ஓடையில் நீர் இல்லை. அவை வறண்டுபோய் தாகத்தில் தவித்து கிடக்கின்றன. வருடம் தவறாமல் மீன் பிடித்த கண்மாயில் ஒரு சொட்டு நீர் இல்லை. கிரிக்கெட் மைதானமாக மாறிவிட்டது. ஆற்று வெள்ளம் அதிகமாகும் ஒவ்வோர் ஆண்டும் "பனையேறி கெண்டைகள்" பாய்ந்து வந்த வாய்க்காலில் பிளாஸ்டிக் கழிவுகள் மட்டுமே எஞ்சியிருக்கின்றன. விவசாயம் இல்லை, கால்நடைகள் இல்லை, பயிர் பச்சை இல்லை, இறுதியில் குடிக்கவும் தண்ணீர் இல்லை. இன்றைய தமிழ்நாட்டின் நிதர்சனமான உண்மை. இது பல ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பேரழவு இல்லை. கடந்த 20 ஆண்டுகளில் நம் காலத்தில் நாம் கண்ட கசப்பான உண்மை. இந்த அழிவுக்கு நாம் ஒவ்வொருவரும் காரணமாகவும், சாட்சியாகவும் இருக்கிறோம்.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம் முன்னோர்கள் பொத்தி பொத்தி பாதுகாத்து நம்மிடம் கொண்டு வந்து சேர்த்த தண்ணீர் செல்வத்தை நாம் இரக்கம் இல்லாமல் நஞ்சாக்கியிருக்கிறோம். நம் அடுத்த தலைமுறை ஒரு வாய் தண்ணீருக்கே தவிக்கப் போகிறது என்பதை விட மூன்றாம் உலகப் போரே தண்ணீருக்காக தான் நிகழும் என்று அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அதனை நோக்கி இன்று... தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது எதிர்க்கட்சிகளால் இட்டுகட்டி கூறப்படும் பொய் என்று தமிழக அரசு கூறுகிறது. தயவு செய்து சென்னை பக்கம் வந்துடாதீங்க என வெளியூரில் வசிக்கும் உறவுகளுக்கு சென்னைவாசிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகின்றன. காலி வீடு கிடைக்காத நிலை மாறி, எங்க பார்த்தாலும் வீடு வாடகைக்கு என்ற பலகையும் தொங்குகிறது என்றும் செய்திகள் கூறுகின்றன. இவையெல்லாம் ஓட்டல்கள் தண்ணீர் பற்றாக்குறையால் மூடப்படஉள்ளதாக கூறுவதை நாம் நம்ப வேண்டாம் என்று அமைச்சர் கூறுகிறார். ஐ.டி. நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் வீட்டிலேயே வேலை பார்க்க சொல்வது ஏற்கனவே நடந்து வருகிறது. அது தண்ணீர் பற்றாக்குறையால் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு அல்ல என்று அரசு கூறுகிறது. சென்னை மட்டுமின்றி தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டை போக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரசிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றம் மனு மீதான விசாரணையின்போது கூறியுள்ளது.

## தாகத்திலும் லாபம்: எங்கே சென்றது தண்ணீர்?

உலக சுகாதார நிறுவனம் ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 150 லிட்டர் நீர்

வழங்க வேண்டும் என்று வரையறுத்துள்ளது. இந்த அளவு தண்ணீர் முழுமையாக கிடைப்பது அமெரிக்க மக்களுக்கு மட்டும்தான். அமெரிக்காவில் ஒரு நபருக்கு நாளொன்றுக்கு 700 லிட்டரும், ஐரோப்பிய நாடுகளில் 200 லிட்டரும் வழங்கப்படுகிறது. ஆப்பிரிக்காவிலோ 10 லிட்டர் கிடைப்பதே அரிது. தமிழ்நாட்டை பொறுத்தவரை நகரங்கள் சராசரியாக 70 லிட்டர் வழங்கப்படுகிறது. 2013-ல் 50 லிட்டருக்கு கீழே சென்று விட்டது. கிராமங்கிலோ படுமோசம். இதுதான் தமிழகத்தின் நீர் விநியோகத்தின் யதார்த்த நிலை.

2013ஆம் ஆண்டில் மையப் பகுதியில் தண்ணீர் கேன் நிறுவனங்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, தமிழ்நாடே ஸ்தம்பித்தது. குடிக்க, குளிக்க, துவைக்க எதற்கும் தண்ணீர் இல்லை. ஒரு ரூபாய் தண்ணீர் பாக்கெட்டின் விலை ஏழு ரூபாய். ஒரு பாட்டில் தண்ணீர் விலை 30 ரூபாய் ஆனது. ஒரு கேன் தண்ணீர் விலை கருப்பு மார்க்கெட்டில் ரூ.100 ஆனது. அப்போது சென்னையிலும் இதர பகுதிகளிலும் உடனே தண்ணீர் கேன் விநியோகிக்க சொல்லித்தான் போராடினோமே தவிர "மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வது அரசின் கடமை" என்பதை மறந்து போனோம். அது திடீரென வந்த மறதி அல்ல. அதனால்தான் தற்போதும் காலி குடங்களை ஏந்திய மக்கள் தான் ஓட்டு போட்டு தேர்ந்தெடுத்த அரசிடம் போராடுகின்றனர். ஆட்சியாளர்கள் உலக வங்கியிடமும், ஐ.நா.விடமும் கடன் வாங்குவதற்கு அடிக்கடி பறக்கிறார்கள்... அதன் உள் இருப்பது தண்ணீரே...

## ஏன் இந்த நிலை?

பொதுவாகவே உலக வங்கி ஐ.நா.சபை புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பதை எல்லாம் நமக்கு சுவாரஸ்யமற்ற குழப்பமான செய்திகளாக தெரிகின்றன. அதனாலேயே அவற்றை கடந்து செல்கிறோம் என்பதுடன், அவற்றை மிக உன்னதமான அமைப்பாகவும் நம்பிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் ஐ.நா.சபை என்பது அப்பழக்கு இல்லாததும் இல்லை. உலக வங்கி ஒன்றும் ஊருக்கு உழைக்கும் உத்தமனும் இல்லை. இவை மேற்கத்திய நாடுகளுக்கும் அவர்களின் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் பிசினஸ் பிடித்து கொடுக்கும் வேலையைத்தான் பார்க்கின்றன. நம் எல்லோரையும் தாகத்தில் தவிக்கவிட்டவர்கள் இவர்கள்தான்.

1992ஆம் ஆண்டு அயர்லாந்து தலைநகர் டப்ளின் நகரில் ஐ.நா. மாநாடு நடந்தது. உலகம் முழுவதும் இருந்து 100 நாடுகளைச் சேர்ந்த அரசு அதிகாரிகளும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். "தண்ணீர் என்பது அதன் அனைத்து அம்சங்களிலும் பொருளாதார மதிப்பை பெற்றுவிட்டது. ஆகவே தண்ணீரை ஒரு பொருளாதார பண்டமாக அறிவிக்க வேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக் கொண்டது. தண்ணீர் என்பது மனிதனின் உயிர் ஆதாரம் என்று சொன்ன ஐ.நா. தண்ணீரை காசு கொடுத்து வாங்க வேண்டிய பண்டம் என்று சொன்னதுடன் நிற்கவில்லை. தண்ணீரை பணம் கொடுத்து வாங்காததால் மக்கள் அதை வீணடிக்கிறார்கள். அதனால் ஏதோ ஒரு வகையில் உபயோகிப்பு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் என மாநாட்டில் பங்கேற்றவர்கள் கூறியதை ஐ.நா. ஏற்றுக்கொண்டது. அதன்பிறகு 1996ஆம் ஆண்டு உலகின் மிகபெரிய தண்ணீர் நிறுவனங்கள் ஒன்றுகூடி உலக தண்ணீர் சபை என்ற ஒரு அமைப்பை உருவாக்கின. விநியோகம் - மேலாண்மை என பேசிய இவர்களின் நோக்கம் தண்ணீர் விநியோகத்தில் இருந்து அரசாங்கங்களை கழற்றி விடுவது. தனியார் தண்ணீருக்கு ஆதரவு லாபி செய்வது என்பதுதான். இப்போது இந்த அமைப்பில் 400-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் உறுப்பினர்களாக உள்ளன (கோவை சூயஸ் நிறுவனம் உள்பட). உலகின் மாபெரும் பணபலம் கொண்ட அமைப்புகளில் இதுவும் ஒன்று. ஐ.நா. சபையை ஆட்டுவிக்கும் இந்த தண்ணீர் சபை அதன் பல திட்டங்களுக்கு நிதியுதவி செய்கிறது. இந்த உலக தண்ணீர் சபை ஐ.நா.வின் பல்வேறு அமைப்புகளில் உறுப்பினராக உள்ளது. ஐ.நா.வின் பல அமைப்புகள் உலக தண்ணீர் சபையில் உறுப்பினர்களாக உள்ளன. இப்படி செம்புல பெயர் நீர் போல கலந்திருக்கும் இவர்கள், ஏழைகள் ஒரு சொம்பு தண்ணீருக்கு தவிப்பது குறித்து சிந்திப்பார்களா என்ன?

இதே உலக தண்ணீர் சபை 2000-ம் ஆண்டில் நெதர்லாந்து நாட்டின் தி ஹேக் நகரில் இன்னொரு கூட்டத்தை நடத்தியது. உலகம் முழுவதும் இருந்து 5,700 பேர் கலந்து கொண்ட இந்த மாநாட்டை உலக வங்கியும், தனியார் தண்ணீர் நிறுவனங்களும் இணைந்து நடத்தின. தண்ணீர் வெறும் தேவையா? அல்லது அடிப்படை

உரிமையா? என்பது தலைப்பு. சாலமன் பாப்பையா பட்டிமன்ற தலைப்பு போல இருந்தாலும் அதன் தீர்ப்பு முன்பே எழுதப்பட்டிருந்தது. அவர்களின் தேவை எல்லாம் தண்ணீர் ஒரு பண்டம் என்பதை ஏற்றுக்கொள்ளச் செய்வதே. 140 நாடுகளின் அமைச்சர்கள், ஐ.நா.சபை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு கடைசியில் தண்ணீர் அடிப்படை உரிமை அல்ல ஒரு தேவை மட்டும்தான் என்ற முடிவுக்கு வந்தன. இதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் தண்ணீர் தனியார்மயத்துக்கான ஆதரவு கருத்துகள் அசுர வேகத்தில் பரப்பப்பட்டன. மறுபக்கம் உலக வங்கி ஒரு கந்து வட்டிக்காரனைப் போல் உலக நாடுகளை மிரட்டுகிறது. மூன்றாம் உலக நாடுகளுக்கு தண்ணீரை தனியார்மயமாக்குவது என்ற நிபந்தனையின் கீழ்தான் கடன் தருகிறது. உலகம் முழுவதும் வளரும் நாடுகளில் 300க்கும் அதிகமான குடிநீர் திட்டங்களில் உலக வங்கி முதலீடு செய்துள்ளது. 2005ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் உலகின் பல நாடுகளுக்கு 50 வறுமை ஒழிப்பு திட்டங்களுக்கு உலக வங்கி நிதி வழங்கியது. இதை ஆய்வு செய்த உலக மேம்பாட்டு இயக்கம் என்ற அமைப்பு 90 சத நாடுகள் தனியார்மயத்துக்கு உத்திரவாதமும் உறுதியும் அளித்துள்ளன. அதில் இந்தியவும் ஒன்று என்று எழுதி வாங்கிக் கொண்டுதான் உலக வங்கி கடன் தருகிறது. கந்துவட்டிக்காரன் வெத்து பேப்பரில் கையெழுத்து வாங்கிக் கொள்வது போல உலக வங்கி அனைத்தையும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களாக எழுதி வாங்கிக் கொள்கிறது.

## நச்சு சிலந்தி வலை

இதற்கிடையே தேசிய நீர் கொள்கை எனும் மோசடி வரைவு அறிக்கையை கடந்த 2012ஆம் ஆண்டு மத்திய அரசு கொண்டு வந்தது. அது இன்னும் ஒரு படி மேலே சென்று நிலத்தடி நீரும் ஒரு கனிம வளம்தான். ஆகவே உங்கள் வீட்டுக்கு கீழ் இருக்கும் நிலத்தடி நீரும் அரசுக்குதான் சொந்தம் என்றது. இந்தியாவில்மிகவும் மலிவான விலையில் விற்கப்படும் பண்டம் தண்ணீர்தான் என்றும், மின்கட்டணம் குறைவாக இருப்பதாலும், நிலத்தடி நீரை பயன்படுத்துவதில் கட்டுப்பாடு இல்லாததாலும் மக்கள் தண்ணீரை விவசாயத்திற்காகவும் வீணடிக்கின்றனர் என்று திட்டக் குழு தலைவர்கள் தண்ணீருக்கு சங்கு ஊதிக் கொண்டிருக்கிறார்கள். தண்ணீர் துறையில் சேவை அளிக்கும் பொறுப்பிலிருந்து அரசாங்கம் விலகிக் கொள்ள வேண்டும் என்று தேசிய நீர் கொள்கையில் பிரகடனப்படுத்துகின்றன. ஒரு அரசாங்கமே தனியார் வரட்டும் என்றால் பிறகு அரசு என தனியாக ஒன்று எதற்கு? காட் ஒப்பந்தத்தில் தண்ணீர் ஒரு பண்டம் என தெளிவாக வரையறுக்கிறது. காட் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ள நாடுகள் தண்ணீர் எங்கள் உரிமை... பாரம்பரிய சொத்து என்று எல்லாம் சொல்ல முடியாது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் என தண்ணீர் ஏற்றுமதிக்கு அனுமதி மறுக்க முடியாது. மற்ற பொருட்களுக்கு சந்தையில் என்ன விதிமுறைகள் உள்ளனவோ, அவை தண்ணீருக்கும் பொருந்தும். காட் ஒப்பந்தம் என்பது ஒரு வழிப்பாதை. இதிலிருந்து வெளிவர வேண்டுமானால் 150 நாடுகளிடமும் சம்மதம் பெற வேண்டும். இப்படி ஒரு நச்சு சிலந்தி வலையில் தண்ணீரையும் சிக்க வைத்துள்ள இந்த ஆட்சியாளர்களும் ஆமாம் போடும் மாநில அரசுக்கும் இந்த மரண பாதையை சொர்க்கத்தின் திறவுகோல் என்கிறார்கள்.

ஆனால், மலையில் பெய்த மழை ஆற்றில் ஓடிவந்து அதை குடத்தில் எடுத்து குடிக்க பயன்படுத்தினோம். இப்படியான மேற்பரப்பு நீர்வளத்தைத்தான் இயற்கை மனிதர்களுக்காக கொடுத்திருக்கிறது. நீர்வளம் குறைவாக உள்ள கடின பாறை பகுதிகளில், மனிதர்கள் நிலத்தை தோண்டி கிணறு வெட்டி தண்ணீர் எடுத்தனர். குடிநீருக்கும், வெள்ளாமைக்கும் தண்ணீரை பயன்படுத்தினர். அப்படி பூமியை தோண்டுவது மனித சக்திக்கு உட்பட்டதாக இருந்த வரையிலும் இது ஒரு பிரச்சனையாக மாறவில்லை. 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட கடின பாறை பூமியை கொண்ட தமிழகத்தில் பல நூறு ஆண்டுகளாக நமது முன்னோர்கள் இப்படித்தான் கிணறுகள் தோண்டி தண்ணீர் எடுத்தனர். அப்போது எல்லாம் நிலத்தடி நீர் பாதிக்கப்படவில்லை. பெரும் உறுமலுடன் இயந்திரங்கள் பூமியை துளையிட தொடங்கிய பிறகு சில பத்தாண்டுகளில் பூமியின் நீர்வளம் சூறையாடப்பட்டுவிட்டது. ஒரு காலத்தில் குளங்களாக, ஏரிகளாக இருந்தவை இன்ற காலி மனைகளாக அடுக்குமாடி குடியிருப்புகளாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.

தெற்கே தாமிரபரணி ஆறு, வடக்கே பாலாறு, கிழக்கே காவிரி, மேற்கே பவானி என திசையெங்கும் நதிகள் ஓடினாலும் தமிழ்நாட்டின்

அதிகபட்ச நீர் தேவையை காலம் காலமாக பூர்த்தி செய்பவை ஏரிகளும், குளங்களுமே. அவை இன்று காணாமல் போன அத்திப்பட்டி கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நவீன உலகில் ஏராளமான அணைக்கட்டுகள் கட்டப்படுகின்றன. இயற்கையை சிதைத்து மக்களை வெளியேற்றி கட்டப்படுகிறது. மழை பெய்யும்போது அந்த நீரை சேமித்து வைக்கும் கிணறுகள் எப்போதும் தாகத்தில் தவிக்க வைக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் மழை அளவு குறைவதாக சொல்வதும், பருவமழை பொய்த்துவிட்டது என்று கூறுவதும் உண்மையல்ல. நமது பிரச்சனைக்கு மழை குறைவு என்று கூறுவது காரணமும் அல்ல. நிலத்தடி நீரை சுரண்டுவது, ஏரி குளங்களை அழிப்பது, ஆற்று மணலை திருடுவது, விவசாயத்தில் நேர்ந்திருக்கும் மாற்றங்கள், நகரமயமாதல், பக்கத்து மாநிலங்களுடன் உள்ள தண்ணீர் பஞ்சாயத்துகள்... என காரணங்கள் கூறுவதை விடுதது 2001ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பை தமிழக அரசு மதித்து தண்ணீர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் குளம் குளம்தான். நீர்நிலைகளை தூர்வாரி பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை என்று கூறுகிறது அந்த தீர்ப்பு. ஆக்கிரமிப்புகளை அகற்ற வழி செய்ய வேண்டும்.

## தண்ணீர் அகதிகள்

அதிகரித்து வரும் தண்ணீர் பிரச்சனையின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் உலகம் முழுக்க லட்சக்கணக்கான மக்கள் வேறு இடங்களுக்கு தண்ணீர் அகதிகளாக குடிபெயர்கிறார்கள். நீரின்றி வறண்டு போன தங்கள் நிலங்களைவிட்டு ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானோர் வெளியேறும் நிலை உள்ளது. ஒவ்வொரு நாளும் இந்த நாட்டின் நட்சத்திர விடுதிகளில் வீணடிக்கப்படும் தண்ணீரை கொண்டு பல லட்சம் மக்களின் தாகத்தை தீர்க்க முடியும். ஏழை மக்கள் சமைக்கவும், துவைக்கவுமே தண்ணீர் இல்லாமல் குடங்களை தூக்கிக் கொண்டு பல கிலோ மீட்டர் அலையும் போது ஸ்டார் ஓட்டல்களின் நீச்சல் குளங்களில் தண்ணீர் ததும்பி நிற்பதும், அரசின் கவனத்தில் வராதா? சென்னையில்அனைத்து சொகுசு விடுதிகளை மொத்தமாக கணக்கிட்டால் 4,656 அறைகள் உள்ளன. ஒரு நட்சத்திர விடுதியின் அறைக்கு நாள் ஒன்றுக்கு 1,500 லிட்டர் முதல் 2,000 லிட்டர் வரை தண்ணீர் செலவிடுவதாக நிபுணர்கள் கூறுகிறார்கள். இதன்படி இந்த நடசத்திர ஓட்டல்கள் ஒரு நாளைக்கு உறிஞ்சி ஏப்பம் விடும் தண்ணீரின் அளவு 50 லட்சம் லிட்டர். இதை நுகரும் மக்களின் எண்ணிக்கையோ சில ஆயிரம் பேர். இதைவிட எண்ணிக்கையில் குறைவான கோடீஸ்வரர்கள் புழங்கும் இடம் கோல்ப் மைதானம். சென்னையில் மட்டும் 3 கோல்ப் மைதானம் உள்ளது. இவற்றை பசுமையாக பராமரிக்க ஒரு நாளைக்கு சராசரியாக 60 லட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. கார் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் 140 லட்சம் லிட்டர் தண்ணீர். இதற்கெல்லாம் எங்கிருந்து வரும் இந்த தண்ணீர்? எல்லாம் மக்களுக்கு வரவேண்டிய தண்ணீர்தான். நான்கு குடம் தண்ணீருக்காக குழாயடியில், வரிசையில் கால் கடுக்க காத்திருந்தும், போராட்டம் நடத்தி தடியடி வாங்கும் பாமர மக்களின் தண்ணீர்தான். தூய நீர் கிடைக்காமல் கிடைக்கும் அசுத்த நீரை பருகுவதால் உலகம் முழுவதும் புதிதுபுதிதா உருவாகும் நோய்களில் 80 சதம் அசுத்த நீரால் உருவாகின்றன. இரண்டாம் உலகப் போருக்கு பிறகு நடந்த ஆயுத தாக்குதலில் இறந்து போன குழந்தைகளின் எண்ணிக்கையைவிட, கடந்த பத்தாண்டுகளில் வயிற்றுப்போக்கால் இறந்த குழந்தைகள்தான் அதிகம். ஒவ்வொரு 8 விநாடிக்கும் ஒரு குழந்தை அசுத்தமான நீரை குடிப்பதன் மூலம் மாண்டு போகிறது. ஒவ்வொரு ஆண்டும் 8 லட்சம் பெண்கள் அசுத்தமான நீரினால் இறக்கின்றனர்.

## நீரும் போரும் உரிமையும்

போர்களின்போது முதல் இலக்காக குறி வைக்கப்படுபவை நீர்நிலைகள்தான். 1991ஆம் ஆண்டு வளைகுடா போர் நடந்தபோது அமெரிக்க படைகள் அணைகள் மீது குண்டு வீசி, குடிக்க கூட தண்ணீர் இல்லாமல் செய்தன. ஈரக் போரிலும் பாக்தாத் ஆதாரங்களை குறி வைத்தே அமெரிக்க படைகள் குண்டு வீசின. 1999ஆம் ஆண்டு நேட்டோ படைகள் வீசிய வெடிகுண்டு மூலமாக யுகோஸ்லோவாகியாவின் நீர் ஆதாரங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன. இந்த அச்சத்தால் தண்ணீர் யுத்தம் ஏற்கனவே தொடங்கி விட்டது. தண்ணீர் ஒரு விற்பனை சரக்கல்ல. அதை எந்த தொழிற்சாலையிலும் தயாரிக்க முடியாது. கோடிகளில் சொத்து வைத்திருந்தாலும் எந்த முதலாளியாலும் ஒரு சொட்டு நீரை கூட உற்பத்தி செய்ய முடியாது. அது இந்த இயற்கை நமக்கு வழங்கியிருக்கும் மாபெரும் சொத்து. அது ஏழைக்கும், பணக்காரனுக்கும் சொந்தம். புல்,

பூண்ட முதல் விலங்குகள், பூச்சிகள் வரையிலும் இந்த பூமியின் அனைத்து ஜீவராசிகளுக்கும் தண்ணீர் மீது சம உரிமை உண்டு. ஆகவே தண்ணீரை விலை வைத்த விற்பனை செய்வது இயற்கைக்கு எதிரான மாபெரும் சுரண்டல். பல கோடி மக்கள் தாகத்தில் சாக, சில ஆயிரம் தண்ணீர் வியாபாரிகள் இயற்கையை சுரண்டி கொள்ளையடிக்கும் செயல் மன்னிக்க முடியாத பயங்கரவாதம். காசு உள்ளவனுக்கு நல்ல தண்ணீர், காசு இல்லாதவனுக்கு தரமற்ற தண்ணீர் என்பது இரக்கமற்ற கொடுஞ்செயல்.

பொது இடத்தில் புகை பிடித்தால் 200 ரூபாய் அபராதம் என்கிறது சட்டம். இந்த சட்டம் வந்த 24 மணி நேரத்திற்குள் தமிழ்நாட்டில் நூற்றுக்கும் மேற்பட்டோரிடம் இருந்து அபராதம் வசூலிக்கப்படுகிறது. குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு அடுத்த 24 மணி நேரத்தில், தமிழ்நாட்டில் முதல் வழக்கு பதிவு செய்யப்படுகிறது. “ஏரிகள் பாதுகாப்பு சட்டம் 2007” அக்டோபர் 1ஆம் தேதி நடைமுறைக்கு வந்தது. இதுவரை ஒரே ஒரு வழக்கு கூட பதிவு செய்யப்படவில்லை. ஒரே ஒருவர் கூட இந்த சட்டத்தின்கீழ் கைது செய்யப்படவில்லை. எனில் 2007ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை ஒருவர் கூட ஏரி, குளம் போன்ற இயற்கை கொடையை ஆக்ரமிப்பு செய்யவில்லையா? ஒரு சதுர அடி நிலம் கூட பறிபோகவில்லையா? மக்களுக்கான தண்ணீரை மடைமாற்றம் செய்யவில்லையா? சட்டம் போடும் அரசே தண்ணீர் விற்பனை மதுபான தொழிற்சாலை என்று ஏரி, புறம்போக்கு மீதான ஆக்ரமிப்பை முழு வேகத்தில் செய்கிறது. முதலாளிகளை வளர்க்கிறது. எனில் தனியார் ஆக்ரமிப்பின் மீது நடவடிக்கை எடுக்கும் யோக்கியதை அரசுக்கு உண்டா? இயற்கையின் கொடையான கடைசி சொட்டு தண்ணீரையும் தாரை வார்க்கலாமா?

- **எஸ்.தமிழ்செல்வி**

---

## காவிரி டெல்டாவை அச்சுறுத்தும் ஹைட்ரோ கார்பன் திட்டம்

## “சோலை வனம் பாலைவனமாக மாறப்போகும் அவலம்”

தமிழகத்தன் நெற்களஞ்சியமான தஞ்சை காவிரி டெல்டாவில் இன்று விவசாயிகள், பொதுமக்களை அச்சுறுத்தும் சொல்லாக ஹைட்ரோ கார்பன் என்ற வார்த்தை மாறியுள்ளது. திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மற்றும் காரைக்காலை உள்ளடக்கிய காவிரி டெல்டா மாவட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 25 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் ஆகும். இதில் உற்பத்தியாகும் தானியங்கள் தான் தமிழகத்தின் 75 சதவீத உணவுத் தேவையை பூர்த்தி செய்கின்றன. நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை தரணியில் உள்ள விளைநிலங்கள், நீர்நிலைகள் அண்மைக் காலமாக பல வகைகளில் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வருவதால் அதன் நிலப்பரப்பு குறைந்து வருகிறது. மணல் கொள்ளை, விளைநிலங்கள் ரியல் எஸ்டேட்களாக மாறுதல், கட்டுமானங்கள், இறால் பண்ணைகள், தொழிற்சாலைகள், சாலை மேம்பாடடுத் திட்டங்கள் போன்றவற்றால் ஆக்கிரமிப்புகள அதிகரித்து உணவு உற்பத்தி குறைந்து வருவதுடன், இப்பகுதிகளில் வேலையின்மையும் அதிகரித்து வருகிறது. இதில் டெல்டா மாவட்டங்களில் ஹைட்ரோ கார்பன் திட்டத்தை மத்திய அரசு நடைமுறைப்படுத்த அனுமதி அளித்துள்ள செயலானது மேலும் இப்பகுதி விளைநிலங்களை நச்சு நிலங்களாக மாறுவதுடன், நிலத்தடி நீர் மாசுபாடு அதிகரிக்கவும், உணவு பஞ்சம் ஏற்படுவதுடன் பொதுமக்கள், கால்நடைகள் வசிக்க இயலாத பாலைவனமாக மாறும் அபாயமும் உள்ளதாக இப்பகுதி விவசாயிகள், தொழிலாளர்கள், மீனவர்கள், வணிகர்கள் அச்சப்படுகின்றனர்.

ஹைட்ரோ கார்பன் என்றால் என்ன? அதை எடுக்கும் முறை

அன்றாட வாழ்வில் நாம் தொடர்ந்து பயன்படுத்தி வரும் பெட்ரோல், டீசல், நிலக்கரி, திரவ வாயு (எல்பிஜி), மீத்தேன் ஆகிய அனைத்தும் சேர்ந்ததுதான் ஹைட்ரோ கார்பன்.

கார்பன், ஹைட்ரஜன் ஆகிய வாயுக்களின் கலவைதான் ஹைட்ரோ கார்பன் என்றழைக்கப்படுகிறது. இது ஆக்ஸிஜனுடன் சேரும்போது, எரிபொருளாக மாறி பெரும் இயந்திரங்களை இயக்குவதற்கான ஆற்றலை பெறுகிறது. முந்தைய காலங்களில் மரங்கள்,

செடிகள், தாவரங்கள் ஆகியவை பூமிக்கடியில் மடிந்துபோய் 3000 அடிக்கு கீழ் உள்ள மணற்பாறைகளில் புதைந்துள்ள படிமங்களாக உள்ளன. அவற்றை (வாயுவினை) நீரியல் விரிசல் முறையில் வெளிக்கொண்டு வரும் திட்டம்தான் ஹைட்ரோ கார்பன் திட்டம். நீரியல் விரிசல்முறைத் திட்டத்தின்கீழ் 3000 மீட்டருக்கும் அப்பால் பூமிக்குள் ஆழமான துளையிட்டு அங்கிருந்து பக்கவாட்டில் எல்லா திசைகளிலும், 2 கி.மீ. வரை துளை போடப்படும். பின்பு பூமியின் மேலிருந்து மிகுதியான அழுத்தத்தில் வேதி நுண் துகல்கள் கலந்த நீர் துளைக்குள் செலுத்தப்படும். அவ்வாறு செலுத்தப்படும்போது பக்கவாட்டு துளைகளில் செல்லும் நீரானது அந்த துளைகளின் மேலும் கீழும் விரிசல்கள் உண்டாக்கும். அந்த விரிசல்கள் வழியே பூமிக்கடியில் அடைபட்டு கிடந்த எரிவாயு நீரில் ஒன்றாக கலக்கும். அதனை உறிஞ்சி பூமியின் மேல்பரப்புக்கு கொண்டுவந்து சுத்திகரிக்கப்பட்டு நீர் தனியாகவும், வாயு தனியாகவும் பிரித்து எடுக்கப்படும்.

இதுபோன்ற வாயுக்கள் கோதாவரி, கங்கை வடிநிலங்களில் காணப்பட்டாலும், காவிரி வடிநிலத்தில் கிடைக்கும் எரி வாயுக்களுக்குதான் அதிக மதிப்புடையவை என கூறுகிறார்கள்.

முதல் சுற்றில் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் முதல் நாகை மாவட்டம் வேளாங்கண்ணி முடிய உள்ள 5091 சதுர கி.மீ. பரப்பளவில் ஹைட்ரோ கார்பன் எடுக்க வேதாந்தா, ஓஎன்ஜிசி நிறுவனங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இரண்டாவது சுற்றில் திருவாரூர் மாவட்டம் திருக்காரவாசலிலிருந்து நாகை மாவட்டம் கரியாப்பட்டணம் வரை 474 சதுர கி.மீ. பரப்பளவு உள்ள நிலம் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கான ஏலமிடப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு வந்த சுனாமி, தானே, கஜா புயல் பாதிப்புகள் மற்றும் ஓஎன்ஜிசி எண்ணெய் துரப்பண பணிகள் ஆகியவற்றால் காவிரி டெல்டா பகுதி மக்களும், மண் வளமும், வாழ்வாதாரமும் மிகவும் பாதிக்கப்பட்ட சூழலில் ஹைட்ரோ கார்பன் திட்டம் இப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. தங்களுக்கே உணவில்லையென்றாலும், வந்த விருந்தினர்களுக்கு உணவளித்து விருந்தோம்பல் புரிந்த விவசாயிகள் பிறரிடம் சோறுக்காக கையேந்தும் நிலை வருமோ என பதறுகிறார்கள்.

தங்களது விளைநிலங்கள், தாவரங்கள், கால்நடைகள் ஆகியவற்றை இழந்து அகதிகளாக ஆகிவிடுவோமா என்ற அச்சத்தில் உரைந்துள்ளார்கள் இப்பகுதி மக்கள். எரிபொருளுக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாழ்படுத்துவதை விடுத்து மாற்றுவழியில் எரிபொருளை உற்பத்தி செய்வதற்காக ஆய்வுகள் மேற்கொள்ள அரசு முன்வர வேண்டும். இயற்கையை நாம் அழித்தால், இயற்கை நம்மை அழிக்கும் என்பதை மனதில் கொண்டு காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்பதை இப்பகுதி மக்களின் கோரிக்கை மட்டுமல்ல தமிழக மக்களின் கோரிக்கையும் இதுதான். செவிமடுக்குமா மத்திய அரசு? தடுத்து நிறுத்துமா மாநில அரசு?

- **எம்.சௌந்தரராஜன்**

## வாசகர் கடிதம்

ஜூன் 2019 மாத இதழ் படித்தேன். மறைந்த முன்னாள் மாநிலச் செயலாளர் ஏ.ராமசாமி அவர்களின் மறைவை முன்னிட்டு அன்னாரது திருவுருவப் படத்தினை முன் அட்டையில் பிரசுரித்திருந்தது சிறப்பு. மற்றபடி அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்




**மதுரை சார் நிலை கருவூலங்கள் முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் நடைபெற்றது.**

# வாசிப்பை நேசிப்போம் - எரியும் பனிக்காடு

செல்லிடை பேசியால் வலைதளங்கள் நமது கைக்கு வந்தபிறகு பலவிதமான நன்மைகள் நமக்கு உருவாகியிருக்கின்றன. ஒவ்வொரு பொருளும் அதன் உபயோகத்தைப் பொறுத்தும் உபயோகிப்பாளர் தரத்தைப் பொறுத்துமே உயர்வான பலனைத் தருகின்றன என்பது என் கருத்து. அந்த அடிப்படையில் மதுரை நண்பர்கள் சிலர் வாட்ஸ்அப்பில் ""வாசிப்பு" என்ற தளத்தை உருவாக்கி அதில் பல்வேறு வகையான நூல்களை கோப்பு வடிவத்தில் (pdf) பகிர்கின்றனர். இதன்மூலம் சமீபத்தில் நான் படித்த நாவல் ""எரியும் பனிக்காடு" ஆகும்.

தமிழ்நாட்டில் விவசாயம் பொய்த்துப்போகும்போது வேலையின்றி தவிக்கும் விவசாயக் கூலித்தொழிலாளர்களும் அவர்களின் குடும்பங்களும் வேலைதேடி படும் துயரங்களையும் வேலைகிடைத்தன் பெயரில் ஏற்பட்ட இடப்பெயர்வு காரணமாக அனுபவிக்கும் இன்னல்களையும், நிராதரவாக விடப்பட்ட நிலையில் அவர்களின் சொல்லவொண்ணாத்துயரங்களையும் இக்கதையில் விரிவாக கதை ஆசிரியர் விவரித்துள்ளார். இன்றும் இந்நிலை நீடிக்கிறதென்றே நான் நினைக்கிறேன். தேயிலைத் தோட்டங்களில் ஆயிரமாயிரம் கூலித்தொழிலாளிகளின் உழைப்பு சுரண்டப்பட்டது போலவே தற்போதும் பல்வேறு கட்டிடப்பணிகள், சுரங்கப்பணிகள் மற்றும் செங்கல் சூளைகளில் பணியிலிருக்கும் குடும்பங்கள் இதை அனுபவித்து வருகின்றனர் என்பதுதான் உண்மை.

இந்நூல் பி.எச்.டேனியல் என்பவரால் எழுதப்பட்டு தமிழில் இரா.முருகவேல் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேயிலைத் தோட்ட கூலித் தொழிலாளர்களின் அவலங்களை அருமையாக எழுதியன் பேரில் ஆங்கிலத்தி ""ரெட் டீ" என மொழிபெயர்க்கப்பட்ட பெருமையுடையது இந்நாவல். ஆங்கிலேயே ஆட்சிக்காலத்தில் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்த அபலைகள் குறித்த தத்துவார்த்தமான கதை கிராமங்களில் நிலவும் வறுமையையும் அதிலிருந்து மீள அவர்கள் நம்பும் மூட நம்பிக்கைகளையும் ஆயுதமாகப் பயன்படுத்தி எந்தளவு உழைப்பு சுரண்டல் நடந்தது என்பதை படம் பிடிக்கிறது நாவல். கோவை மாவட்டம் பொள்ளாச்சியின் ஆனைமலை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளிலுள்ள தேயிலைத் தோட்டங்களில் உள்ள தேயிலைச் செடிகள் அனைத்தும் தண்ணீர் ஊற்றி வளர்க்கப்படவில்லை வறுமையில் உழன்ற விவசாயக் கூலிகள் பன்றிகள் அமைக்கும் சிறுகுடில்களில் அடைக்கப்பட்டு, அட்டைக்கடியாலும், மலேரியா காய்ச்சலிலும், கடுங்குளிரிலும் ஓய்வின்றி வேலை வாங்கப்பட்டு, நோய்வாய்ப்பட்ட நிலையிலும் மாட்டுக் கொட்டகையைவிட மோசமான மருத்துவமனையில் சிகிச்சை என்ற பெயரில் உயிரிழக்கச் செய்யும் கொடுமைகள் மூலம் மனித இரத்தத்தால் (Red tea) வளர்க்கப்பட்டவை என நாவலாசிரியர் விவரிக்கிறார். எனவேதான் அவர்கள் உள்ளத்தில் எழும்பும் எண்ண அலைகளால் பனிக்காடு எரிவதாகக் குறிப்பிட்டு நாவல் தலைப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய துயரங்களிலிருந்து தப்பி உயிர்வாழும் கூலிகளின் இரத்தத்தை அட்டையைவிட மோசமாக மேஸ்திரிகளும், கங்காணிகளும் பெண்களின் உல்லாச சல்லாபத்தில் திளைக்கும் மேனேஜர்களும், வெள்ளைக்காரத்துரைகளின் விருப்பங்களை நிறைவேற்ற எதையும் செய்யத்தயாராகும் ஒருசில கூலிகளும் கதை முழுவதும் வந்து போகின்றனர். இதை ஏற்க மறுக்கும் பெண் கூலிகளின் கையறுநிலை விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இந்த கதை மாந்தர்களில் கருப்பன், வள்ளி, சங்கரபாண்டி, வெள்ளையன், முத்தையா, கோவிந்தன் போன்ற கூலிகளும் பூச்சாத்தால் போன்ற பெண்களும் அப்பாவு, ஜான்சன் போன்ற மேனேஜர்களும் ராஜ், அருள்தாஸ், ராபர்ட் போன்ற கிளர்க்குகளும், மருத்துவர் ஆப்பிரகாம், வெள்ளைத்துரைவொயிட், காளிச்செட்டியார், மாரியாயி, பெரியகருப்பன் என்ற மாந்திரிகவாதி போன்றோர் கதை முழுவதும் ஊடுருவி பயணிக்கின்றனர்.

தனது ஊரில் நிலவும் வறுமை காரணமாக கயத்தாறுக்கு வேலைதேடிச் செல்லும் கருப்பன், வேலை கிடைக்காத நிலையில் சங்கரபாண்டி என்ற மேஸ்திரியின் ஆசை வார்த்தைகளினால் கடன் வலையில் சிக்கி, திருமணமாகி ஆறே மாதமான தனது புதுமனைவியுடன் தனது அம்மாவை அக்கா வீட்டில் பாதுகாப்பாய் இருக்கவிட்டுவிட்டு தேயிலைத் தோட்டத்தை நோக்கி இரயிலில் பயணிப்பதிலிருந்து தொடங்குகிறது கதை. தேயிலைத் தோட்டத்தில் உழைத்தால் பாலாறும் தேனாறும் ஓடும் என்ற எண்ணத்தில் சென்ற கருப்பன் தான் ஊரில் புறப்படும்போது பெற்ற 40 ரூபாய் கடனை அடைப்பதற்காக அல்லும் பகலும் தனது மனைவியுடன் தேயிலைக்காட்டில் மூன்றாண்டுகள் உழைத்து கடனடைத்து ஊர் திரும்ப தயாராகும் மூன்றாம் ஆண்டின் முடிவில் ஓய்வின்றி பணியில் உழைத்ததால் நோய் தின்ற தன் மனைவியை இழந்து நிற்கும் காட்சி எப்போதும் மனதில் நிழலாடுகிறது. ஊரைவிட்டு கிளம்பும்போது நல்ல காலம் வருகிறது என்ற இரவுக்கோடாங்கி சொன்னதை நம்பிச்சென்ற கருப்பன் மூன்றாண்டும் வராத நல்லகாலம் குறித்த கவலை கிஞ்சித்தும் இன்றி தனது மனைவி உடல்நலக்குறைவு காரணமாக தொடர்சிகிச்சைக்கு மருத்துவமனையில்

சேர்க்கச் சொல்லி மருத்துவர் ஆப்ரகாம் சொல்லும்போது, மாந்திரீகவாதியிடம் சென்று ஏழு ரூபாய்க்கு பேரம்பேசி மருத்துவமனையில் சேர்க்க நாள்குறிப்பதும், மூன்று தாயத்துகளை அவள் உடல்முழுவதும் கட்டியபின்பு மருத்துவமனையில் சேர்ப்பதும் ஏழை எளிய உழைப்பாளி மக்கள் மத்தியில் எந்தளவு மூடநம்பிக்கை வேரூன்றி இருக்கிறது என்பதை நூலாசிரியர் மிகச்சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார். உண்மையில் நேரீர் செந்நீர்தான் தேயிலைக்காடுகள் எரியும் பனிக்காடுகள் தான். வாசிப்போம், வாசிப்பை நேசிப்போம்.

**முனைவர் மதுரை சுகி**

---

# தோழியே! எதிர்த்திடு கார்ப்பரே அரசியலை

தோழியே!
மக்களை நோக்கிய பயணத்தில் தன்னை
அடையாளப்படுத்திக் கொள்ளும்
உன்னையே நம்புகிறது எதிர்கால சந்ததி! கார்ப்பரேட்டால்
உறியப்பட்ட ஊழியர் சலுகைகளின்
அரசியல் புரியாமல்...

மிகக் குறைந்தபட்ச அகவிலைப்படி வேண்டி
ஆயிரம் வாசல் முன்பே ஆர்ப்பாட்டம்!
நடத்திய பின்பே அறிவிப்பு! ஏன்
கார்ப்பரேட்டின் அரசியலே!

ஓசையற்ற ஆதிசேஷய்யாவின் ஆட்குறைப்பின்
உள்சோகம் நீ உணராவிட்டால்
கடைசியில் உன் இதயமும்
செல்லரித்துப் போகலாம்! ஏன்
கார்ப்பரேட்டின் அரசியலே!

வணிகவரியிலோ... கருவூலத்திலோ...
குறைக்கப்படும் ஊழியர் இடத்தால்
போராட்ட உணர்ச்சியோடு உடனடியாக
பொருந்தாதவருக்கு போராட்டத்தின்
நல்லிசை என்றும் சொந்தமில்லை! ஏன்
கார்ப்பரேட்டின் அரசியலே!

இயக்கம் குறித்த குறுஞ்செய்தி...
பரிமாற்றம்... இதனை மட்டும்
கடுமையாக பணிகளுக்கிடையே விட்டுவிடாதே
அரசாங்கத்தின் அலட்சியத்தால்

கோரிக்கைக்கான போராட்டத்தின் காலத்திலே
பணிகொலையாகும் அரசு ஊழியர்ஆசிரியர்களின்
துடிதுடித்த குரல் கேட்கிறதா?
அதற்கும் அரசின் அலட்சிய பதிலே
உனக்கு திருப்பி கேட்கின்றதா? ஏன்
கார்ப்பரேட்டின் அரசியலே...

நச்சரிக்கும் அந்த தோழியின் குரல்
மத்திய மதவாத ஆட்சியிலே
கண்டுகொள்ளா மாநில ஆட்சியிலே
உன்னிடம் விரும்பி வேண்டுவது போராடி
பெற்ற உரிமையை இழந்திட வேண்டாம்.

எதிர்காலம் மன்னிக்காது ஏன்?
கார்ப்பரேட் அரசியலில் எதுவும் நடக்குமே!
துறையின் வளர்ச்சியே ஊழியர் வளர்ச்சி
என்று நம்பி பணி செய்திட்ட
ஊழியர்கள் அனைவரும் நடுத்தெருவில்!

வரி ஏய்ப்பு! கொள்ளையடிப்பு!
ஊழியர் மற்றும் தொழிலாளர்களின்
சிந்தனையை சிதைத்திட்ட
பன்னாட்டு முதலாளி! பாதுகாப்பாய் திமிரில்!
ஒரே இரவில் சொந்த நாட்டில்
சொந்த ஜாமீனில் நீதிமன்றத்தில்
அறுத்துக் கொன்றது? ஏன்
கார்ப்பரேட் அரசியலில் எதுவுமே நடக்குமே!

புதிய பென்சன் திட்டத்தில் பிடிக்கப்பட்ட
பணத்தை கேட்டோம்! பணி ஓய்வு நாளிலே
பணியிடை நீக்கம் நமக்குதான்!
கார்ப்பரேட்டின் காரணகர்த்தா
லலித் மோடி... நீரவ் மோடி...
விஜய் மல்லையா போன்றவருக்கு
அரசாங்க செலவில் விருந்து!
பாதுகாப்பாய் அனுப்பி வைத்து
கடைசி வரை தண்டனையில்லை ஏன்
கார்ப்பரேட் அரசியலில் எதுவுமே நடக்குமே!

**எஸ்.தமிழ்செல்வி**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம்



சங்கத்தின் 14வது மாநில பிரதிநித்துவ பேரவை 2019 ஆகஸ்ட் 10,11 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதற்கான வரவேற்புகுழு அமைப்பு கூட்டம் 8.06.2019 தருமபுரி சிஐடியு அலுவலகத்தில் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட தலைவர் கோ.பழனியம்மாள் தலைமை வகித்தார்.

மாநில தலைவர் எம்.சௌந்தரராஜன் மாநில பொதுச் செயலாளர் கோவிந்தராசு மாநில துணைத் தலைவர்கள் சோ.பத்மா, வெ.செல்லையா, ப.சிவக்குமார் மற்றும் மாநில செயலாளர்கள் சி.அய்யனார் மற்றும் க.பிச்சைவேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க தருமபுரி மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன்,மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, துறைவாரி சங்க நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம், சி.காவேரி, ருத்ரையன், முனிராஜ், சி.அழகிரி, நாகராஜ், சிஐடியு சி.நாகராசன், பி.எஸ்.என்.எல். இ.யூ பி.கிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

வரவேற்புகுழு தலைவராக எம்.சுருளிநாதன், வரவேற்புகுழு செயலாளராக கோ.பழனி யம்மாள், பொருளாளராக பி.சி.குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

வரவேற்பு குழு அமைப்பு கூட்டத்தில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத்துறை ஊழியர் சங்கத்தின் தருமபுரி மாவட்ட மையத்தின் சார்பில் மாநில பேரவை நிதியாக ரூ.1,00,000/-ஐ தருமபுரி மாவட்ட தலைவர் வரவேற்பு குழுத் தலைவரிடம் வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் பராமரிப்பு நிறுவனத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மாநில பொருளாளர் புகழேந்தி மாநில பேரவை நிதியாக ரூ.5000/- வழங்கினார்.

## தொழிற்பயிற்சி அலுவலர் சங்கம்

தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் 2019-2020ஆம் ஆண்டுக்கான மாநில நிர்வாகிகள் தேர்தல் 27.5.2019-ல் நடைபெற்றது. வெற்றி பெற்ற நிர்வாகிகள் 10.6.2019 அன்று பொறுப்பேற்றுக் கொண்டனர். இந்நிகழ்வில் அரசு ஊழியர் சங்க மாநில பொருளாளர் எம்.தங்கராஜ், தென் சென்னை மாவட்டச் செயலாளர் வெங்கடேசன், தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் சி.ராமலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநிலத் தவைராக என்.சுப்பிரமணியன், துணைத் தலைவர்களாக எம்.சீனிவாசன், எம்.பஞ்சம், பொதுச் செயலாளராக என்.ரமேஷ், செயலாளராக பி.நடராஜன், அமைப்புச் செயலாளராக எஸ்.நவநீதன், பொருளாளராக என்.திருநாவுக்கரசு, தலைமை நிலைய செயலாளராக ஆர்.அமரேசன், மதுரை மண்டல செயலாளராக ஏ.உடையாளி, நெல்லை மண்டல செயலாளராக டி.சேகர் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். அனைவருக்கும் அரசு ஊழியர் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com